

SUNSHINE
Glaxo
ஸன்ஷைன் கிளாக்ஸோ
குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது
எச். ஜே. பாஸ்டர் அண்ட் கோ., லிட்.




ஸாரிடோன்

மாடர்ன் தியேட்டர்ஸின்

# 1000 தலைவாங்கி

# அபூர்வ சிந்தாமணி



V. N. ஜானகி
P. S. கோவிந்தன்
C. S. கணேச பாகவதர்
R. பாலசுப்ரமண்யம்
M. R. சாமிநாதன்
காளி N. ரத்னம்
வரலட்சுமி
மாதுரிதேவி
C. T. ராஜகாந்தம்

முதலியோர் நடித்தது

டைரக்ஷன்:
**T.R.சுந்தரம்**
B.A.,B.Sc.(Leeds)

# கல்கி

## பொருளடக்கம்


| மலர் 7<br>இதழ் 7 | செப்டம்பர் 14 | சர்வஜித்து<br>ஆவணி 29 |
|---|---|---|



| | | | |
|---|---|---|---|
| என்ன சேதி? | ... | ... | 7 |
| நிகழ்ச்சிச் சித்திரம் | சாஸ்திரி | ... | 8 |
| கண்ணிருந்தும் பாரார்! | ... | ... | 11 |
| கலைக் களஞ்சியமும் தமிழ்த் திருவிழாவும் | ... | ... | 15 |
| ராஜத்தின் மதனி | எஸ். கிருஷ்ணன் | ... | 17 |
| பாரதி மண்டப நிதி | ... | ... | 23 |
| பாணிக்கிரகணம் | கே. எஸ். எஸ். ராகவன் | ... | 27 |
| கர்வமும் பங்கமும் | அநுத்தமா | ... | 32 |
| காலக்ஷேபம் | ... | ... | 40 |
| அரசனைக் காட்டுவாயா! | டி. கே. சி. | ... | 42 |
| பாப்பா மலர் | ராஜி | ... | 44 |
| சந்திர ஹாரம் | பிரேம்சந்த் | ... | 47 |




சஷ்டியப்த பூர்த்தி நடந்து ஒரு மாமாங்கத்துக்கு மேலான இந்தக் கிழ இளைஞரைப் பார்த்துக் கொள்ளுங்கள். சென்ற மாதத்தில் இவர் ஆகாச விமானம் ஏறி அமெரிக்காவுக்குப் பறந்து சென்றிருக்கிறார்! சும்மா வீட்டில் இருப்பவர்கள் பத்திரிகைகளில் வரும் விமான விபத்துச் செய்திகளைப் படித்துப் பீதியடைந்திருக்கும் இந்தக் காலத்தில், இந்த எழுபத்திரண்டு வயதான இளம் வயோதிகர் ஆகாச விமானம் ஏறிப் பாதாள உலகத்துக்குச் சென்றிருக்கிறார். எதற்காகத் தெரியுமா? அமெரிக்காவில் மோட்டார்த் தொழிலில் ஏற்பட்டிருக்கும் நவீன அபிவிருத்தி முறைகளைப் பார்த்துத் தெரிந்துகொண்டு வருவதற்காகத்தான்.




“கடிகாரம் தப்பு மணி காட்டினாலும் காட்டும்; டி. வி. எஸ். பஸ் நேரம் தப்பி வராது!” என்று நேயர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள்; தஞ்சாவூரிலிருந்து திருநெல்வேலி வரையில் உள்ளவர்கள் அவசியம் கேள்விப்பட்டிருப்பார்கள். அத்தகைய புகழ் வாய்ந்த டி. வி. எஸ். பஸ் சர்விஸை ஏற்படுத்திய ஸ்ரீ டி. வி. சுந்தரமய்யங்கார் இவர்தான்.

மதுரையில் 1912-ம் வருஷத்தில் டி. வி. சுந்தரமய்யங்கார் அண்டு ஸன்ஸ் என்ற பெயருடன் மோட்டார் சில்லறைக் கருவிகள் விற்பனைக் கம்பெனியை இவர் ஆரம்பித்தார். 1921-ல் மேற்படி கம்பெனி மோட்டார் வண்டி விற்பனை தொடங்கியது. 1928-ல் மேற்படி கம்பெனியார் ஆரம்பித்த மோட்டார் செப்பனிடும் தொழிற்சாலை இப்போது இந்தியாவிலேயே மிகப் பெரிய மோட்டார் ரிப்பேர் தொழிற்சாலையாக விளங்குகிறது. சமீபத்தில் சென்னை நகரில் “சுந்தரம் மோட்டார்ஸ்” என்ற பெரிய கிளைக் கம்பெனியும் ஆரம்பித்திருக்கிறார்கள்.


டி. வி. எஸ். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் யாரும் இது வரை எவ்விதப் புகாரும் கூறியதாகக் கேள்விப்பட்டதில்லை. இந்தக் கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளிகள் வேறு எந்தக் கம்பெனியையும் விட அதிக சம்பளமும் வசதிகளும் பெற்றுத் திருப்தியுடன் இருக்கிறார்கள்.

ஸ்ரீ டி. வி. சுந்தரமய்யங்காரின் புதல்வர்கள் ஐவரும் தந்தையைப் போலவே தொழில் திறமையும் நிர்வாக ஆற்றலும் பெற்று, அவர் ஆரம்பித்த தொழிலையும் உப தொழில்களையும் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

ஹரிஜன சேவை முதலான பொதுநலக் காரியங்களுக்கு நன்கொடை வழங்குவதில் டி. வி. எஸ். குடும்பத்தின் தாராளம் பிரசித்தியான விஷயம்.

ஸ்ரீ சுந்தரமய்யங்கார் அவர்களின் அமெரிக்கப் பிரயாணத்தின் பயனாகத் தென்னிந்தியாவில் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஏற்பட்டு, அதன் பயனாகத் தென்னிந்தியாவின் பொருள் வளம் பெருகும் என்று எதிர்பார்க்கிறோம்.

# பழமையும் புதுமையும்




நம் முன்னோர்கள் தங்களுடைய பற்களை ஆலம்விழுது, வேப்பங்குச்சி முதலியவைகளால் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

தற்காலத்தில் நாம் விஞ்ஞானசாஸ்திரத்தின் உதவியால் கோலினாஸ் பல்பேஸ்டைக் கொண்டு பற்களை சுத்தசெய்து சுத்தமாகவும் கெட்டியாகவும் வைத்துக்கொள்ள முடிகிறது. ஏனென்றால் கோலினாஸ் நுரை பல இடுக்குகளில் சென்று பரிஷ்காரப்படுத்தி, ருசி, வாய் சுத்தம், யாவற்றையும் இனிமையாக்குகிறது.

# KOLYNOS

கோலினாஸ்
சிக்கனமானது
½ அங்குல பேஸ்ட்
தான் தேவையானது



# என்ன சேதி?

## பேயாட்டம் ஓயுமா?

“சுதந்திர இந்தியா என்று நாம் கனவு
ண்டு வந்த இந்தியா இத்தகையதுதானா?
குப்பு வெறியாகிற இந்தக் கொடிய
பயை, கோர நோயைத் தயவு தாட்சண்ய
ன்றி நமது முழு சக்தியையும் உபயோகித்
த் தொலைத்தொழிக்க வேண்டும்.
ந்த வெறி, உலகம் முழுதும் நம்மைப்
ார்த்துச் சிரிக்கும்படி செய்யும் மானக்
கேடான காரியமென்பதை நமது ஜனங்கள்
ணர்ந்து கொள்ளவேண்டும். நாட்டில்
மைதி நிலவும்படி செய்வதே நமது முதற்
டமை யாகும்” என்று இந்தியாவின்
டிசூடா மன்னரான பண்டித ஜவாஹர்
ால் நேரு கர்ஜித்திருக்கின்றார்.

வகுப்பு வெறியர்களால் மூண்ட தீயின்
க்கிரம் நாளுக்கு நாள் அதிகமாகி வருவது
நாட்டின் துரதிர்ஷ்டமே யாகும்.
ந்தியாவின் தலைநகரான டில்லியைக்
ட மேற்படி தீ இப்போது வியாபித்துக்
கொண்டு விட்டது.

வகுப்பு வெறி காரணமாகப் பஞ்சாபத்
ல் மாத்திரம் லட்சக் கணக்கானவர் பலி
கி யிருக்கின்றார்களெனில், அதன்
க்கிரத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ள
ாம். போதாக்குறைக்கு, உற்றார் உறவின
ரையும் உடைமைகளையும் இழந்து வந்
ள்ள அகதிகளைக் கண்டு ஆவேசங்கொள்
ளும் ஜனங்கள் வஞ்சம் தீர்க்க முற்படுவ
தால் நிலைமை இன்னும் மோசமாகி விடு
கிறது. அவ்வாறு வஞ்சம் தீர்ப்பதன்
லம் அவர்கள் தங்கள் சமூகத்தினருக்கும்
சத்துக்கும் பெரும் இன்னல் இழைத்த
ர்களாகின்றனர் , என்பதை உணர்ந்து
கொள்ளுவதில்லை. ஆக்க வேலைகளில் ஈடு
ட்டு, பஞ்சத்தையும் பிணியையும் ஒழித்து,
ாட்டில் சுபீட்சம் நிலவும்படி செய்யும்
மகத்தான பொறுப்பை நமது மாபெருந் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே, இச்சமயத்தில் ஜனங்கள் மேற் கொண்டு அவர்களுக்குத் தீராத் தொல்லையையும் மனோ வேதனையையும் உண்டு பண்ணுவது, யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுவதற் கொப்பாகும்.

## முதல் கோணல்...!

பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்தது!

பாலஸ்தீனத்தில் தங்களுடைய ஆதிக் கத்தை நிலைநிறுத்திக் கொள்ளுவதற்காக பிரிட்டன் செய்த முதல் கோணல் முற்றும் கோணலாக முடிந்திருக்கிறது. அதாவது, அவர்கள் பாலஸ்தீனத்தை மூன்று துண்டங்களாக்கி, ஒரு பகுதி யூதர்களுக்கென்றும், மற்றொன்று அராபியர்களுக் கென்றும் மூன்றாவது பகுதி தங்களுக்கென்றும் ‘தர்ம நியாயமான’ ஒரு முடிவைச் செய் தார்கள். அன்றிருந்து பாலஸ்தீனத் துக்குச் சனியன் பிடித்தது. பாலஸ்தீனம் சம்பந்தப் பட்ட வரையில் பிரிட்டிஷாரை யும் சனியன் பிடித்தது.

அதன் விளைவாகச் சென்ற பல வருஷங் களுக்கு முன் பாலஸ்தீனத்தில் ஆரம்ப மான ரணகளத்தின் உக்ரம் இன்றளவும் தணியவில்லை. அந்த ரணகளத்துக்கு எத்த னையோ பிரிட்டிஷ் அதிகாரிகளும் துருப்பு களும் பலியாகி யிருக்கிறார்கள். அதற்குப் பலியான அராபியர்கள், யூதர்களின் தொகை பதினாயிரக் கணக்கில் இருக்கும்.

எனவே, அந்தப் பிரச்னையை பிரிட்டன் சில மாதங்களுக்கு முன் ஐக்கிய நாடுகளின் தீர்ப்புக்கு விட்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இப்போது, அவ்விஷயமாக ஐ. நா.

சபைக் கமிட்டி தனது சிபார்சைச் செய்திருக்கிறது. பிரிட்டன் ஆதியில் போட்ட முடிச்சை மேற்படி சர்வதேசக் கமிட்டியால் கூட அவிழ்க்க முடியவில்லை! பாலஸ்தீனத்தை மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்றுதான் அது சிபார்சு செய்திருக்கிறது. மேற்படி சிபார்சை ஐ. நா. சபை அங்கீகரித்தாலும், அதன் பயனாகப் பாலஸ்தீனப் பிரச்னை தீருமா என்பது சந்தேகந்தான்.

## துஷ்டப் பிரசாரம்

ஜன்ம குணத்தையோ, கால் பட்ட வழக்கத்தையோ திடீரென மாற்றிக் கொள்ளுவதென்பது மகா கஷ்டமான காரியமல்லவா? பிரிட்டிஷ் பத்திரிகைகளும் இந்தியா விஷயமாகத் தங்களுடைய கால் பட்ட வழக்கத்தைத் திடீரென்று மாற்றிக் கொள்ள முடியாதுதான்.

இந்தியாவின் சிறப்பையும் உயர்வையும் எடுத்துக் காட்டக்கூடிய செய்திகளை பிரிட்டிஷ் பத்திரிகைகள் பிரசுரிக்காமல் விட்டுவிடுவதும், இந்தியாவின் நற்பெயருக்குக் களங்கத்தை உண்டுபண்ணக் கூடிய வெறுப்புக் கலகங்கள் பற்றிய செய்திகளை ஒன்றுக்குப் பத்தாக மிகைப் படுத்திப் பிரசுரிப்பதும் பொய்ப் பிரசாரக் கலையில் தேர்ச்சி பெற்ற பிரிட்டிஷ் பத்திரிகைகளின் வெகு காலத்திய வழக்கமாகும்.

இந்தியா சுதந்திரம் பெறத் தகுதியற்றதென்று பொய்ப் பிரசாரம் செய்வதற்காக முன்னர் அந்தப் பத்திரிகைகள் அத்தகைய வழக்கத்தைக் கையாண்டு வந்தன. இப்போதோ இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டது. இன்னும்கூட அப்பத்திரிகைகள் தங்களுடைய விபரீத வழக்கத்தைக் கைவிட முடியவில்லை போலும்!

## ஆணித்தரமான பதில்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிந்து விட்டதால், இந்தியா முழுதும் அராஜகம் தாண்டவமாடுகிறதாம். எங்கு பார்த்தாலும் ஜனங்கள் ஒருவரை யொருவர் வெட்டிக் கொண்டும் கட்டுக் கொண்டும் மாண்டு வருகிறார்களாம். இதைக் காட்டிலும் துஷ்டப் பிரசாரம் வேறெதாவது இருக்க முடியுமா? "நியூ ஸ்டேட்ஸ்மன்" என்ற பிரிட்டிஷ் பத்திரிகை மாத்திரம் மற்ற பிரிட்டிஷ் பத்திரிகைகளின் அயோக்கியத்தனமான மேற்படி பிரசாரத்தை வெகுவாகக் கண்டித்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வங்காளத்தில் 15 லட்சம் பேர்கள் பஞ்சத்திற்குப் பலியானதைக் காட்டிலும் படுமோசமாக இப்போது இந்தியாவில் எத்தகைய சம்பவமும் நடைபெற்று விடவில்லை என்பதையும் அப்பத்திரிகை சுட்டிக் காட்டியிருக்கிறது.

அறிஞர் ஜார்ஜ் பர்னார்ட் ஷாவும் இவ்விஷயத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். பிரிவினைக் குள்ளாகிச் சுதந்திரம் பெற்ற அயர்லாந்து போன்ற நாடுகளிலும் கலகங்களும் படுகொலைகளும் நடந்திருக்கின்றன. எனவே, நாற்பது கோடி மக்கள் வாழும் மிகப் பெரிய தேசமான இந்தியாவின் ஒரு பகுதியிலோ, அல்லது சில பகுதிகளிலோ கலகங்கள் நடப்பதைப் பிரமாதப் படுத்துவது கூடாதென்று பர்னார்ட் ஷா சமீபத்தில் கூறினார்.

எனவே, இந்தியாவின் குறைகளை மிகைப் படுத்திக் கூறும் கைங்கரியத்தை விட்டுவிட்டு, வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் அமெரிக்காவிடம் யாசகம் கேட்கும்படியான நிலைமையிலிருக்கும் பிரிட்டனைச் சீர்திருத்தும் பிரயோஜனமான வேலையில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஈடுபடுவதுதான் கண்ணியமும் நேர்மையும் ஆகும்.


## கதர்த் திருமணம்


★

"கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. எம். ராஜபாதரின் சகோதரரான சிரஞ்சீவி கோவிந்தனுக்கும், ஸ்ரீ எஸ். கதிர்வேலு முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி செல்வமணிக்கும் சென்ற 5—9—'47 வெள்ளிக்கிழமை யன்று கதர் மணம் கமழும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. தேச பக்தர்களோடு தியாக சீலர்களும், கலைஞர்களோடு கலா ரசிகர்களும் வந்திருந்து, மணமக்களுக்குப் பல்லாண்டு கூறி, மலர்மாரி பொழிந்தார்கள்.


வாழ்க, செல்வமணி—கோவிந்தன்!


# நிகழ்ச்சிச் சித்திரம்



-சாஸ்திரி


பாகிஸ்தான் வியாபார 'சுபிட்சம்':
எல்லை கடந்த ஏற்றுமதி!
அகதிகள்
பம்பாய்க்கு
சென்னைக்கு
டில்லிக்கு
பாகிஸ்தான் ஜங்ஷன்
(சரக்குகள் ஏற்றுமிடம்)


இந்தக் குதிரைக்குத்தான் என்ன ஆணவம்! ஊக்கம் கொண்டு புல்லைக் கொடுத்தால் வெறி பிடித்து அந்தப் பக்கமாக ஓடுகின்றதே?
திவான். ஸர். ராமசாமி முதலியார்
மைசூர் ஜனங்கள்
யதேச்சாதிகாரம்
பூரண பொறுப்பாட்சி

# கண்ணிருந்தும் பாரார்!

வாழ்க!

வாழ்க, வாழ்கவே!!

லெப்டினன்ட் கர்னல் ஸ்ரீ பத்மநாபதாஸ வஞ்சிபால ஸர் பாலராம வர்மா ஸ்ரீ சித்திரைத் திருநாள் குலசேகர கிரீடபதி சுல்தான் மகாராஜா ராஜ ராமராஜா பகதூர் ஷாம்ஷேர் ஜங் என்ற பெயரும் புகழும் பெற்ற திருவாங்கூர் மகாராஜா வாழ்கவே!!!

திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பிடித்திருந்த கிரஹணம் ஸ்ரீ பத்மநாபஸ்வாமியின் பேரருளால் விட்டு விட்டது.

அந்தச் சமஸ்தானத்தின் கீர்த்தி மீண்டும் நிலைநாட்டப்பட்டு விட்டது.

'சுதந்திரம்' என்பது மக்களுக்கேயன்றி மன்னருக்கு அல்லவென்ற ஜனநாயக தத்துவத்தை, திருவாங்கூர் மகாராஜா ஒப்புக்கொண்டு திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

அதாவது, சுதந்திர உரிமை என்பது மகாஜனங்களுக்குத் தானேயன்றி, மண்டலாதிபதிகளுக்கு அல்லவென்பது ஒரு சிறந்த மண்டலாதிபதியின் வாக்கினாலேயே ஊர்ஜிதமாகி விட்டது.

ஒருவர், தமது வாழ்க்கையில் மகத்தானதொரு நல்ல காரியத்தைச் செய்தால், அவர் எத்தனை தவறுகள் செய்திருப்பினும் அவையெல்லாம், சூரியனைக் கண்ட பனிபோல் இருந்தவிடந் தெரியாமல் மறைந்து விடுகின்றன. அதுபோலவே ஒருவர், தமது வாழ்க்கையில் மகா பாதகமான ஒரு காரியத்தைச் செய்து விட்டால், அவர் செய்த சகல நல்ல காரியங்களும்கூட மேற்படி பாதகச் செயல் காரணமாக அடிபட்டுப் போய்விடுகின்றன.

பல்வேறு துறைகளிலும் முன்னேற்ற மடைந்து முன்னுதாரணமாகத் திகழும் திருவாங்கூர், சென்ற பல ஆண்டுகளாகச் சோபை யிழந்து, கீர்த்தி மழுங்கிக் கிடந்தது. அடக்குமுறைகளாகிற குப்பை கூளங்கள் அந்தச் சமஸ்தானத்தின் பிரகாசத்தை அடியோடு மறைத்திருந்தன.

ஆனால் இப்போதோ, திருவாங்கூர் மகாராஜாவின் ஒரே ஒரு மகத்தான நல்ல காரியத்தால், திருவாங்கூருக்கு ஏற்பட்டிருந்த அபகீர்த்தி யெல்லாம் அடியோடு ஒழிந்து, அது மீண்டும் பன்மடங்கு அதிக தேஜஸ் பெற்று விட்டது.

* * *

திருவாங்கூர் சமஸ்தானத்துக்குப் பொறுப்பாட்சி வழங்குவதாக மகாராஜா பிரகடனம் செய்து விட்டார்.

'பொறுப்பாட்சி வழங்கப் போகிறீர்களா? ரொம்ப சரி! ஆனால், எந்த யுகத்தில்......?' என்று மைசூர் மகாஜனங்களைப் போல் திருவாங்கூர் ஜனங்களும் கேட்க மகாராஜா இடம் வைத்துக் கொள்ளவில்லை.

இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் விஷயத்தில் சந்தேகத்துக்கு இடமின்றி பிரிட்டிஷார் தேதி குறிப்பிட்டது போல், திருவாங்கூர் ஜனங்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கும் விஷயமாகவும் மகாராஜா தேதி குறிப்பிட்டு விட்டார்.

1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந் தேதிக்குள் திருவாங்கூர் ஜனப் பிரதிநிதி சபை யொன்று கூடி, புதிய அரசியலைத் தயாரிக்க வேண்டும். வயது வந்தவர் எல்லோருக்கும் வாக்குரிமை யுண்டு. அவர்களே மேற்படி சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இவைதான் பிரகடனத்தின் சாரம்.

அரண்மனை நிர்வாகம், ராஜ குடும்ப நிர்வாகம், தவிர்த்து மத தர்ம பரிபாலனம் போன்ற சிலவற்றைத் தவிர, மற்ற சகல விஷயங்களை யொட்டியும் சட்டமியற்ற ஜனப்பிரதிநிதிச் சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.

எனவே, சில மாதங்களுக்குள் திருவாங்கூர் ஜனங்கள் பொறுப்பாட்சி பெறப் போவது நிச்சயமாகி விட்டது.

திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் தலைவரும் மகாராஜாவின் பிரகடனத்தை மனப்பூர்வமாக வரவேற்றிருக்கிறார்.

மகாராஜாவின் மேற்படி பிரகடனத்தின் பலனாக, திருவாங்கூர் சமஸ்தான சரித்திரத்திலேயே ஒரு புதிய சகாப்தம் உதயமாகின்றது என்று அவர் கூறுகிறார்.

அப் பிரகடனத்தைக் குறித்து இதர காங்கிரஸ் தலைவர்களும் தங்களுடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருவாங்கூர் சம்பந்தப்பட்ட வரையில் இவ்வாறாகப் பழையன கழிந்து புதியதொரு புகழ்ப் படலம் ஆரம்பமாகியிருக்கின்றது.

• • •

சென்ற நூறு ஆண்டுகளுக்கு மேலாக அமுலில் இருந்து வந்த திவான் பதவியைக்கூட, அது எதேச்சாதிகாரத்தின் சின்னமென்று கொச்சி மகாராஜா ரத்துச் செய்து விட்டார்.

அங்கு முன்பே பூரண பொறுப்பாட்சி ஆரம்பமாகிவிட்டது.

இந்தியாவின் க்ஷேமமே ஜனங்களின் க்ஷேமம்; ஜனங்களின் க்ஷேமமே தம்முடைய க்ஷேமம் என்ற களங்கமற்ற ஜனநாயக தத்துவத்தையும் கொச்சி மகாராஜா தாமாக வலுவில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முற்பட்டுள்ளார்.

வட இந்தியாவிலும் பல சமஸ்தானங்கள் பூரண பொறுப்பாட்சி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

தென்னிந்தியாவில் முக்கிய சமஸ்தானங்களாக விளங்கும் கொச்சியும் திருவாங்கூரும் புகழ் ஏணியின் உச்சிக்குச் சென்று வருகையில், மற்றும் இரண்டு பெரிய முக்கிய சமஸ்தானங்களான மைசூரும் ஹைதராபாத்தும் புகழ் ஏணியிலிருந்து தலைகுப்புற விழுந்து கொண்டிருக்கின்றன!

படே படே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் அதற்குப் பணிவிடை செய்து வந்த குட்டி ஏகாதிபத்தியங்களும், பலனற்றவை யென்று எந்தெந்த முறைகளைக் குப்பையில் எறிந்தனவோ, அவற்றைத்தான் இப்போது மைசூரும் ஹைதராபாத்தும் கண்மூடித்தனமாக எடுத்துக் கையாண்டு வருகின்றன.

'ராமராஜ்யம்' என்று ஒரு காலத்தில் மகாத்மா காந்தியால் பாராட்டப் பட்ட மைசூர் சமஸ்தானம் இன்று அடக்குமுறை ராஜ்யமாக மாறியிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

அங்கு தடியடியும் போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகமும் தினசரி நிகழ்ச்சிகளாகி விட்டன. மற்ற இடங்களில் ஜனப் பிரதிநிதிகள் ஆட்சி புரிந்து வருகையில், மைசூரிலும் ஹைதராபாத்திலும் ஜனப்பிரதிநிதிகள் சிறையில் அடைக்கப்பட்டு வருகிறார்கள்.

பொறுப்பாட்சி அளிப்பதே தமது நோக்கமென்று மைசூர் மகாராஜா சென்ற திங்கட்கிழமையன்று ஜனங்களுக்கு விடுத்த செய்தியும் திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை.

அரசியல் சீர்திருத்தங்கள் அடங்கிய ஒரு திட்டத்தைத் தயாரிக்கும்படி எட்டு மாதங்களுக்கு முந்தியே திவானுக்கு மைசூர் மகாராஜா கட்டளை பிறப்பித்து விட்டார். பொறுப்பாட்சியே தமது நோக்கமென்று இப்போது மகாராஜா கூறுகிறார். மைசூர் ஜனங்களின் அரசியல் முன்னேற்றத்தை யாரும் எதிர்க்கவில்லையென்றும், பெரும்பாலோர் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு திட்டத்தைத் தயாரிப்பதே தங்களுடைய நோக்கமென்றும் திவான் ஸர் ராமசாமி முதலியார் சொல்கிறார்.

திவானின் மேற்படி கூற்றுக்கும் இந்தியா விஷயமாக பிரிட்டிஷாரின் பழைய கூற்றுக்கும் அதிக வித்தியாசமில்லை.

மைசூர் ஜனங்களுக்குப் பொறுப்பாட்சி அளிப்பதே மகாராஜா, திவான் இவர்களின் நோக்கமாயின், அதே பொறுப்பாட்சி கோரி, சாத்வீக இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பிரஜைகளைச் சுட்டுத் தள்ளுவானேன்? அவர்களைத் தடிகளால் அடிப்பானேன்? தலைவர்களைச் சிறைகளில் போடுவானேன்? அங்கு ஊரடங்கு சட்டமும் தாண்டவம் ஆடுவானேன்?

பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடைந்து கீர்த்தி பெற்றுள்ள மைசூர் சமஸ்தானத்தின் மன்னரும், அனுபவம் வாய்ந்த திவான் ஸர் ராமசாமி முதலியாரும் காலத்தின் போக்கை நன்கறிந்து, கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களின் நல்லுதாரணத்தைப் பின்பற்றித் தங்குதடை எதுவுமின்றிப் பூரண பொறுப்பாட்சி வழங்குவார்களாக.

எந்த சக்தியைக் கண்டு பயந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே நழுவி விட்டதோ, அதே சக்தியை மைசூர்

எதேச்சாதிகாரம் எதிர்த்து நிற்க முற்படுவது புத்திசாலித்தன மாகாது.

* * *

அடுத்தபடியாக, ஹைதராபாத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

ஹைதராபாத் நிஜாமின் எதேச்சாதிகார ஆணவமானது அவரது கண்களையே மறைத்து விட்டதென்று தோன்றுகிறது.

அங்கு நடைபெற்று வரும் அடக்குமுறைகள், இந்திய மாகாணங்களில் பிரிட்டிஷார் கையாண்ட கொடிய அடக்குமுறைகளையும் மிஞ்சி விட்டன.

அங்கு அவசரச் சட்ட ஆட்சி அலங்கோலம் உச்ச நிலையை அடைந்திருப்பதுடன், சட்டத்தை மீறி அதிகாரிகளின் எதேச்சாதிகார தர்பாரும் சகிக்கமுடியாத கட்டத்தை அடைந்திருக்கிறதாம்.

காந்திக் குல்லாய் வைத்திருந்ததற்காகப் பலர் போலீசாரின் தடியடிக் கொடுமைக்கு ஆளாகி யிருக்கிறார்கள்.

சிலர் பட்டினியால் சிறையில் மாண்டனரென்றும் தெரிகிறது.

குடையைக் கண்டு பட்டிக்காட்டு மாடுகள் வெறிப்பது போன்று, இந்திய தேசியக் கொடியைக் கண்டு ஹைதராபாத் அதிகாரிகள் வெறிக்கின்றார்களாம்.

பத்திரிகைகளும் அதிகாரிகளின் கோபாவேசத்துக்கு ஆளாகி வருகின்றன.

இவ்வாறாக ஹைதராபாத் சமஸ்தான நிர்வாகம் சகல அவலட்சணங்களும் வாய்க்கப் பெற்ற எதேச்சாதிகார நிர்வாகமாக இருந்து வருகிறது.

அதாவது, ஹைதராபாத் பெற்றுள்ள 'சுதந்திர'மானது, அந்தச் சமஸ்தானப் பிரஜைகளுக்கு மரணாவஸ்தையாக முடிந்திருக்கிறது.

இன்று ஹைதராபாத்தில் நடந்து வரும் அட்டூழியங்களுக்குத் தாம் பொறுப்பாளியாக இருக்க முடியாதென்றுதான், முன் யோசனையுடன் சர் மிர்ஸா இஸ்மெயில் சில மாதங்களுக்கு முன் ஹைதராபாத் பிரதம மந்திரி பதவியை உதறித் தள்ளியிருக்க வேண்டும்.

புகழ் பெற்ற நிர்வாகியும், சிறந்த தேச சேவகரும், வகுப்புத் துவேஷமற்ற பெரியாருமான ஸர் மிர்ஸா இஸ்மெயில் போன்றவர்கள், நிஜாம் சமஸ்தானம் போன்ற குட்டி பாகிஸ்தானில் எவ்வாறு இருக்க முடியும்?

பல்வேறு சமஸ்தானங்களிலும் ஜனங்களின் சக்தியை அறிந்தே பல நரேந்திரர்களும் புத்திசாலித்தனமாக இந்திய அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்தார்கள். தங்களுடைய ரக்ஷகர்களான பிரிட்டிஷாரே விடைபெற்றுக் கொண்டு செல்லும்போது, தாங்கள் இனித் தனித்து நிற்பது ஆபத்தாக முடியு மென்பதை உணர்ந்தார்கள். ஐக்கிய இந்தியாவைப் பலப்படுத்துவதே தங்களுக்கும் பலம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து கொண்டார்கள். அந்த உண்மையை ஏற்கெனவே அறிந்து கொள்ளாதவர்களும் இந்தியாவின் தயவின்றித் தாங்கள் ஒருநாள்கூட ஆட்சிபுரிய முடியாதென்பதை லார்டு மவுண்ட்பேட்டனுடைய எச்சரிக்கையிலிருந்து புரிந்து கொண்டார்கள்.

கண்முன் இவ்வளவெல்லாம் நடந்தும்கூட இன்னும் பொறுப்பாட்சி வழங்கவும், ஐக்கிய இந்தியாவில் சேரவும் தயங்கும் பேர்வழிகள் இருக்கத்தான் செய்கிறார்களென்றால், அதைக் குறித்து என்ன சொல்லுவது?

* * *

எதற்கும் ஒரு முடிவு உண்டு.

எனவே, ஹைதராபாத் சமஸ்தானத்தின் அலங்கோல தர்பாருக்கும் ஒரு முடிவு ஏற்பட்டுத்தான் தீரும். பிரஜைகளின் ஏகோபித்த அபிலாஷையைப் புறக்கணிக்கும் அரசாங்கம் அதிக காலம் நீடிக்க முடியாது.

இந்த உண்மையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்கூட உணர்ந்து கொண்டு விட்டது. நிஜாம் மன்னரின் சகோதர மண்டலாதிபதிகளில் பலரும் இதை உணர்ந்து கொண்டு விட்டார்கள். போபால் நவாப்கூடத் தமது விபரீதப் போக்கை ஓரளவு மாற்றிக் கொண்டு விட்டார்.

கூடிய சீக்கிரத்தில் பல சமஸ்தானங்களும் போட்டி போட்டுக் கொண்டு பொறுப் பாட்சி முறையை அமுலுக்குக் கொண்டு வந்தாலும் அதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படியிருக்க, ஹைதராபாத் சமஸ்தானம் மாத்திரம் ஜனங்களை நசுக்குவதோ அல்லது இந்திய தேசிய அரசாங்கத்துக்கு நேர்முக மாகவோ மறைமுக மாகவோ சவால் விடுப்பதோ, சிட்டுக் குருவி சமுத்திர ராஜனை ஜயம் செய்து விடுவதாக பயமுறுத்திய கதைக் கொப்பாகவே முடியும்.


14TH EDITION
ENCYCLOPEDIA BRITANNICA
GAME TO GUN VOLUME 10
GUNN TO HYDR VOLUME 11
HYDR TO JERE VOLUME 12
JERE TO LIBI VOLUME 13
LIBI TO MARY VOLUME 14
MARY TO MUS VOLUME 15
P TO PLAN VOLUME 17
RAYN TO SARR VOLUME 19
PLAN TO RAYM VOLUME 18
SARS TO SORC VOLUME 20
SORD TO TEXT VOLUME 21
TEXT TO VASC VOLUME 22
VASE TO ZYGO VOLUME 23

# கலைக் களஞ்சியமும் தமிழ்த் திருவிழாவும்

பல்லாயிரம் ஆண்டுகளாகச் சங்கம் நடத்தித் தமிழ் வளர்த்த மதுரைமா நகருக்குச் செப்டம்பர் 5ல வெள்ளிக்கிழமை ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடன் சென்றிருந்தேன்.

அன்று மாலை கல்வி அமைச்சர் ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் தலைமையில் மதுரைத் தமிழன்பர்களின் கூட்டம் ஒன்று நடைபெறுவதாக இருந்தது. மாலை வரையில் வீட்டில் வெறுமனே உட்கார்ந்திருப்பானேன் என்று எண்ணி, "கலைக் களஞ்சிய நிதி"க்குப் பண வசூல் செய்வதற்காகப் புறப்பட்டோம். ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

பொதுக் காரியங்களுக்கு நிதி வசூலிக்கப் புறப்பட்டால் பலவித அநுபவங்களும் ஏற்படுவது இயல்பல்லவா? எதிர்பாராத இடங்களில் நல்ல வரவேற்பும் வெற்றியும் கிடைக்கும். எதிர்பார்த்துச் சென்ற இடங்களில் ஏமாற்றமும் ஏற்படும்.

இந்த மாதிரி அநுபவங்களைப் பெற்றுக்கொண்டு நான்மாடக்கூடலின் வீதிகளைச் சுற்றி வருகையில், ஸ்ரீ என். எம். ஆர். "மதுரை மில்லுக்கும் போகலாமா?" என்று கேட்டார். கேட்டுவிட்டு உடனே, "டோக் துரை இருந்தால் நிச்சயமாக ஏதேனும் கொடுப்பார். இப்போது மார்ஷல் என்று ஒருவர் இருக்கிறார். அவர் என்ன சொல்கிறாரோ?" என்றார். கடைசியில், அந்த மார்ஷல் துரையையும் பார்த்தே விடுவது என்று முடிவு செய்தோம்.

மிஸ்டர் மார்ஷல் எங்களை மிக்க மரியாதையுடனும் முகமலர்ச்சியுடனும் வரவேற்றார். ட்ரோஜன் செட்டியார் அவர்களையும் என்னையும் ஸ்ரீமான் என். எம். ஆர். அறிமுகப்படுத்தினார். என்னை, "கல்கி ஆசிரியர்" என்று சொன்ன உடனே, "விளம்பரத்துக்காக வந்தீர்களா?" என்று கேட்டார் துரை! "இல்லை; உங்கள் விளம்பரம் கல்கிக்கு ஏற்கெனவே வருகிறது!" என்று சொல்லி வைத்தேன். (வருகிறதோ, இல்லையோ, அந்தச் சமயம் தோன்றியதைச் சொன்னேன்.) பிறகு, வந்த காரியத்தை ஸ்ரீ என். எம். ஆர். சொன்னார். நானும் ஏதாவது சொல்லலாம் என்று, "எங்கள் ஊர்க்காரர்களுக்கு 'என்ஸைக்ளோபீடியா'வைப் பற்றி விளக்கிச் சொல்லக் கஷ்டப்படுகிறது. ஆனால் உங்களுக்குச் சொல்வதில் கஷ்டமில்லை. 'என்ஸைக்ளோபீடியா' புத்தகத்தின் முக்கியம் உங்களுக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டுமே?" என்றேன்.

உடனே மிஸ்டர் மார்ஷல் துரை நாற்காலியிலிருந்து எழுந்து பக்கத்திலிருந்த சுவரண்டை சென்றார். சுவரோடு சுவராகக் கருங்காலி மரத்தினால் செய்து அமைந்திருந்த அலமாரியைத் திறந்தார். "பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

அந்த அலமாரிக்குள் 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்னும் புத்தகத்தின் 24 பகுதிகளும் வரிசைக் கிரமமாக வைக்கப்பட்டிருந்தன.

மிஸ்டர் மார்ஷலின் அறையில் வேறு ஒரு புத்தகமும் இல்லை. 'என்ஸைக்ளோபீடியா' புத்தகத்தின் இருபத்து நாலு பகுதிகள் மட்டுந்தான் இருந்தன.

அவருடைய அறையின் சுவர்களில் வேறு படம் ஒன்றுமில்லை, ஒரே ஒரு விநாயகரின் படம் மட்டுந்தான் இருந்தது!

அந்த விநாயகப் பெருமானின் அருளினால் நாங்கள் போன காரியமும் வெற்றிகரமாகவே முடிந்தது. மதுரை மில்லுக்காக ரூ. 2250-ம், தமது சொந்த நன்கொடையாக ரூ. 251-ம் ஆக ரூ. 2501-க்கு மார்ஷல் துரை செக் கொடுத்தார். காரியத்தின் முக்கியத்தைத் தாம் உணர்ந்திருப்பதற்கு அத்தாட்சியாகச் சொந்த நன்கொடையும் கொடுப்பதாகக் கூறினார். ஒரு ஆங்கிலேயரிடம் தமிழ்க் கலைக் களஞ்சியத்துக்கு ரூ. 2501 நன்கொடை பெற்ற பெருமித மகிழ்ச்சியுடன் திரும்பினோம்.

*　*　*

ஆங்கிலத்தில் உள்ள 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்னும் நூலின் 24 பகுதிகளின் படத்தை எதிர்ப்பக்கத்தில் நேயர்கள் காணலாம். உலகம் தோன்றிய காலத்திலிருந்து அறிவாராய்ச்சியின் மூலமாகவும் கலை உணர்ச்சியின் மூலமாகவும் சாதிக்கப்பட்டிருக்கும் சகல விஷயங்களையும் இந்த நூலில் சுருக்கமாகவும் தெளிவாகவும் படித்தறியலாம்.

இதைப் போன்ற அற்புதமான புத்தகம் ஒன்றைத் தமிழிலும் கொண்டுவர வேண்டுமென்று விரும்பி, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக, கல்வி அமைச்சர் ஸ்ரீ அவிநாசிலிங்கம் விடுத்த வேண்டுகோளைப் பற்றி நேயர்கள் அறிவார்கள். அதன்

பயனாகப் பின்வரும் நன்கொடைகள் இன்று வரை அளிக்கப்பட்டிருக்கின்றன :

| | | | |
|---|---|---|---|
| ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார், செட்டிநாடு | 10,001 | 0 | 0 |
| டாக்டர் ஆர். எம். அழகப்பச் செட்டியார், சென்னை | 10,001 | 0 | 0 |
| ஸ்ரீ டி. பி. ராமசாமி பிள்ளை, சென்னை | 5,025 | 0 | 0 |
| ட்ரேஜரர் ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார், சென்னை | 5,001 | 0 | 0 |
| ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார், வடபாதிமங்கலம் | 5,001 | 0 | 0 |
| புதுக்கோட்டை ராஜா | 5,000 | 0 | 0 |
| சிவகெங்கை ராஜா | 5,000 | 0 | 0 |
| கருமுத்து ஸ்ரீ தியாகராஜச் செட்டியார், மதுரை | 5,000 | 0 | 0 |
| மதுரா மில்ஸ் லிமிடெட் & ஸ்ரீ மார்ஷல் | 2,501 | 0 | 0 |
| என். எம். ராயலு அண்டு ஸன்ஸ், மதுரை | 2,500 | 0 | 0 |
| டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்டு ஸன்ஸ், மதுரை | 2,500 | 0 | 0 |
| "கல்கி" காரியாலயம் | 2,001 | 0 | 0 |
| ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம், கல்வி மந்திரி, சென்னை | 2,001 | 0 | 0 |
| எட்டயபுரம் ராஜா | 2,000 | 0 | 0 |
| கே. வி. எல். எம். ராமநாதன் செட்டியார், கோட்டையூர் | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ வி. டி. வீரப்பச் செட்டியார், கண்டனூர் | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. எல். ஏ. ஆர். சோமநாதஞ் செட்டியார், தேவகோட்டை | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ எஸ். கே. சுந்தரம், சென்னை | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ என். ராமசாமி நாயுடு, ஷெரிப், சென்னை | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ டி. ஏ. ராமலிங்கச் செட்டியார், கோயமுத்தூர் | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், கோயமுத்தூர் | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. எம். சம்பந்தம், நெல்லை அண்டு கோ, சென்னை | 1,001 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. எம். பி. சுப்பராயச் செட்டியார், நாகப்பட்டினம் | 1,000 | 0 | 0 |
| ஸ்ரீ என். சோமசுந்தரம், அட்வகேட், சென்னை | 1,000 | 0 | 0 |
| ஆக ரூ. | 78,540 | 0 | 0 |

"கலைக் களஞ்சியம்" வேலை பூர்த்தியாவதற்கு மொத்தம் ஆறு லட்சம் ரூபாய் தேவை. இதில் காலில் ஒரு பங்கு அதாவது ஒன்றரை லட்சமாவது வசூலானதும் வேலை தொடங்குவதென்று ஏற்பாடாகியிருக்கிறது. விண்ணப்பம் வெளியான ஒரு மாதத்துக்குள் ரூபாய் எண்பதினாயிரம் வசூலாகியிருப்பது மிகவும் திருப்திகரமான காரியம். இன்னும் எழுபதினாயிரம் வசூலாவது பெரிதல்ல. தமிழ்நாட்டில் தமிழன்பு வாய்ந்த இன்னும் எத்தனையோ தனிகர்கள் இருக்கிறார்கள். நூற்றாண்டு நூற்றாண்டாகத் தமிழ் வளர்த்த தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலிய மடங்கள் இருக்கின்றன. இந்த அரும் பெரும் தமிழ்ப்பணிக்கு இன்னும் எழுபதினாயிரம் ரூபாய் கூடிய விரைவில் சேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

மதுரைக்குப் போன காரியத்தைப் பற்றியும் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தமிழில் புதிதாக வெளியாகும் நூல்களைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஆண்டுதோறும் ஆறு பகுதிகளில் வெளியாகும் சிறந்த நூலுக்கு ரூபாய் ஐந்நூறு வீதம் பரிசு வழங்கத் தீர்மானித்திருப்பதை நேயர்கள் அறிவார்கள். பரிசு வழங்கும் வைபவத்தைத் தமிழ்த் திருவிழாவாகக் கொண்டாடுவதென்றும், முதன் முதலாக நடக்கும் திருவிழாவை மதுரை நகரில் டிசம்பர் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்றும் ஏற்பாடு. டிசம்பர் இரண்டாம் வாரத்தில் மேற்படி விழாவை நடத்த வரவேற்பு சபை அமைப்பதற்காகச் செப்டம்பர் 5உ மாலை மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கல்வி அமைச்சர் ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்களின் தலைமையில் தமிழன்பர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. தலைவர் கூட்டத்தின் நோக்கங்களை எடுத்துக் கூறிய பிறகு, வாணாளெல்லாம் தமிழ்ப் பணி செய்த பேராசிரியர் சோமசுந்தர பாரதியாரும் கருமுத்து தியாகராஜச் செட்டியார் முதலிய தமிழன்பர்களும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தமிழ்த் திருவிழாவை மதுரைமா நகரில் நடத்தும் விஷயத்தில் அனைவரும் மிக்க உற்சாகம் காட்டினார்கள். பிறகு, பின்வரும் வரவேற்பு சபை அமைக்கப்பட்டது.

தலைவர்: ராமநாதபுரம் ராஜா அவர்கள்; உபதலைவர்கள்: பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், திரு கருமுத்து தியாகராஜா, திரு டி. கி. சீனிவாச அய்யங்கார், திரு ஆர். நாகராஜ்; பொக்கிஷதார்: டி. எஸ். ராஜம்; காரியதரிசிகள்: ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன், ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி, ஸ்ரீ ஜி. வி. ராதாகிருஷ்ணன், ஸ்ரீ பழனியப்பன்.

மதுரை ஜில்லா எம். எல். ஏ.க்கள், பத்திரிகாசிரியர்கள், பிரமுகர்கள், தமிழன்பர்கள் பலர் வரவேற்புசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இன்னும் பலரும் அங்கத்தினராகச் சேரக்கூடுமாதலால் எல்லா அங்கத்தினர் பெயர்களும் பின்னால் ஒருங்கே வெளியிடப்படும். ரா. கி.




# ராஜத்தின் மதனி

எஸ். கிருஷ்ணன்

பங்களாவின் முன்புறமுள்ள தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாள் ராஜம். ஒரு காலத்தில் விதவிதமான பூச்செடிகள் பூத்துக் குலுங்க அழகாயிருந்த தோட்டம் இன்று களையிழந்து காட்சி யளித்தது. தோட்டத்தின் மூலையில் ராஜத்தின் கணவன் உயிருடன் இருக்கையில் 'கார் ஷெட்'டாக இருந்த கட்டடம் இப்போது இடிந்த சுவர்களுடன் நின்று கொண்டிருந்தது. அதன் சொந்தக்காரியான ராஜத்தின் உள்ளத்தில் சூழ்ந்திருந்த சூனியத்தின் வெளித்தோற்றம்போல் அது காட்சி யளித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தாலே ராஜத்துக்கு ஒரே திகில்.

அவளுடைய கணவன் உயிருடன் இருக்கும் வரை அந்த பங்களாவுக்கும் உயிர் இருந்தது போலும்!

தனிமை சூழ்ந்த இந்த வாழ்வி லிருந்து தப்ப வழியில்லையா என்று எண்ணமிட்டது அவள் மனம். அப்படி யொன்றும் அவளுக்கு வழி இல்லாமலும் போகவில்லை. ஏழு நாட்களுக்கு முன் அவள் எந்த அண்ணன் வீட்டிலிருந்து இங்கு புறப்பட்டு வந்தாளோ, அந்த வீட்டு வாசல் அவளுக்காக என்றுமே திறந்திருக்கும். அவளுடைய மதனி இருக்கும் வரை அதைப் பற்றிப் பயமே யில்லை.

மதனியின் ஞாபகம் வரவே அவள் மனதில் பழைய ஞாபகங்கள் எழுந்தன.

ராஜத்திற்கு ஏழு வயது இருக்கும். அவள் தந்தை கண்ணை மூடினார். பன்னிரண்டு வயதில் தாயை இழந்தாள். அப்பொழுது அவளுடைய அண்ணன் அந்த ஊரிலிருந்த ஒரு பாங்கில் காஷியர் வேலை பார்த்து வந்தான். வீட்டில் சமையல் வேலைக்கு ஒரு பாட்டி அம்மாள் இருந்தாள்.

ராஜம் இரண்டாம் பாரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். ஒருநாள் மாலை அவள் பள்ளிக்கூடத்தி லிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, ஒரு பெரிய மனிதரும் அவளுடைய அண்ணனுமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

ராஜத்தைப் பார்த்ததும் அவளுடைய அண்ணன், "ராஜம்! உள்ளே போய் 'டிபன்' பண்ணிவிட்டுச் சீக்கிரம் வா! சாயங்காலம் ஆறரை மணி வண்டிக்கு நாம் மதுரைக்குப் போகணும்" என்றான்.

"எதற்கு அண்ணா?" என்று ராஜம் கேட்டதற்கு, அந்தப் பெரிய மனிதர் சிரித்துக் கொண்டே, "உன் மதனியைப் பார்க்க!" என்றார்.

அண்ணன், அந்தப் பெரிய மனிதர் இருவருடனும் ராஜம் மதுரைக்குப் போனாள். கடுகி யிருக்கும் மதுரையை அடைந்த போது, அந்தப் பெரிய மனிதருடைய தங்கையின் மகள் விசாலத்தைப் பார்க்கத் தான் அவர்கள் மதுரைக்கு வந்திருந்தனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்களுக்கு முன்னால் விசாலம் காப்பி கொண்டு வந்து வைத்தாள். ராஜத்திற்கு அந்த ஒரு டம்ளர் காப்பி போதவில்லை. ஆனால் தன் மாமாவுக்கும் ராஜத்தின் அண்ணனுக்கும் இரண்டாந் தடவை உபசாரமாய்க் காப்பி கொடுத்த விசாலம், ராஜத்திடம் மட்டும் 'வேண்டுமா?' என்று கூடக் கேட்கவில்லை. விசாலத்தின் மாமா, "ராஜத்துக்கும் இன்னும் கொஞ்சம் காப்பி கொடேன்!" என்ற போது விசாலம், "ராத்திரி வேளையில் அதிகமாய்க் காப்பி சாப்பிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது!" என்று கூறிவிட்டு, உள்ளே போய் ராஜத்துக்குப் பிடிக்காத 'ஓவல்டின்'னைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அன்றே ராஜத்துக்கு இவள் தன் மதனியாய் வந்தால் எப்படியிருக்குமோ என்றாகி விட்டது. ஆனால் அவனைக் கேட்டா அவன் அண்ணன் கலியாணம் செய்து கொள்வான்? அவனுக்குப் பெண் பிடித்தது, விவாகமும் நிச்சயமாயிற்று.

இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் மதனி அண்ணனுடன் குடித்தனம் செய்யவும் வந்துவிட்டாள்.

வந்து அரைமணி நேரம்கூட இருக்காது. ராஜம், மதனியைத் தயக்கத்துடன் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தான். மதனி சட்டென்று பையிலிருந்த பொட்டலத்தை எடுத்து, வெகு சுதந்திரத்துடன் ராஜத்தை அழைத்து, அந்தப் பொட்டலத்திலிருந்த பூவை எடுத்து அவனுக்குச் சூட்டினாள். சில நிமிஷங்களுக்குப் பின் ராஜம் கையில் பாட்மிட்டன் மட்டையுடன் விளையாடக் கிளம்பியதும், "இன்றைக்கு விளையாடப் போகாதே, ராஜம்! என்னோடு கோவிலுக்கு வா, அர்ச்சனை பண்ணவேணும்!" என்றாள் மதனி.

"இன்றைக்கு நான் 'மேச்' ஆடப் போகணும்!" என்றான் ராஜம்.

அதற்கு மதனி சிரித்துக் கொண்டே, "என்ன பிரமாதம், ஒருநாள் போகா விட்டால் என்ன? வீட்டில் வேலை இருந்தது என்று சொல்லிவிட்டால் போகிறது!" என்றாள்.

ராஜத்தின் அண்ணனும், "இன்றைக்கு நீ விளையாடப் போகவேண்டாம்" என்றான்.

ராஜம் அன்றைய விளையாட்டுக்குப் போகவில்லை. வந்ததும் வராததுமாய் அதிகாரம் பண்ணும் மதனியின்மேலும் அவளுக்காகப் பரிந்து பேசும் அண்ணனின்மேலும் பொங்கி வந்த கோபத்தை ராஜம் அடக்கிக் கொண்டான்.

## 2

நாள் போகப் போக இந்த அதிகாரத் தோரணை வளர்ந்ததே ஒழியக் குறையவில்லை. "இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. விளக்கெண்ணெய் குடித்தே ஆகவேண்டும்" என்பாள் மதனி ஒருநாள். "இன்றைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்திருக்கிறாய். ஓடியாடி விளையாடாமல் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வந்துவிடு!" என்று இன்னொருநாள் அவளிடமிருந்து கட்டளை பிறக்கும். இந்தக் கட்டுப்பாடுகளை மனப்பூர்வமாய் ராஜம் வெறுத்தான். ஏனெனில், பன்னிரண்டு வயதுவரை ராஜம் ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் வளர்ந்தவன்.

அன்று வெள்ளிக்கிழமை. ராஜத்துக்குப் பரீக்ஷை நடந்து கொண்டிருந்த சமயம். அவன் ஏதோ புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். மதனி அவனிடம் வந்து, "ராஜம், சீக்கிரம் வா! எண்ணெய் தேய்த்து விடுகிறேன்!" என்றாள்.

"இன்றைக்கு வேண்டாம், மதனி! நிறைய படிக்கவேண்டும்!" என்றான் ராஜம்.

"அப்படிச் சொல்லவே கூடாது!" என்று கூறிக்கொண்டே, ராஜத்திற்கு எதிரிலிருந்த புஸ்தகங்களை எடுத்து, மதனி மேஜைமேல் வைத்தாள். பிறகு ராஜத்தின் கையைப் பிடித்து ஸ்நான அறைக்கு இழுத்துச் சென்றாள்.

ராஜத்துக்கு ஆத்திரம் பொங்கிற்று. அவன் மதனியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, "நீ சொல்கிறபடி கேட்க நான் உன் அடிமையா? என்னமோ அதிகாரம் தான் பறக்கிறதே!" என்று எரிந்து விழுந்து கொண்டே, அவ்விடத்திலிருந்து சென்று விட்டான்.

மாலையில் ராஜம் திரும்பி வந்ததும் அவன் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. "வெந்நீர் சூடா யிருக்கிறது; எண்ணெய் தேய்த்துக் குளிக்கிறாயா?" என்று மதனி சாந்தமாய்க் கேட்டாள்.

மதனி தன்னிடம் பேசவே மாட்டாள் என்று நினைத்துக் கொண்டு வந்ததற்கு இது எவ்வளவு விபரீதமான அனுபவம்! ராஜம் திகைத்துப் போனான்!

ஒருநாள் மாலை ராஜம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து சமையல் அறையில் காப்பி எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கையில் அவளுடைய அண்ணன் வந்து, "என்ன ராஜம், மதனிக்குத்தான் உடம்பு சரியில்லையே, இன்றைக்கு ஒரு நாள் உன் புடவையை நீ துவைத்துக் கொள்ளக் கூடாதா? மதனி மத்தியானம் முழுதும் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாளே!" என்று கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டான்.

ராஜம் நேராகக் கிணற்றங் கரைக்குப் போனபோது, மதனி அவளுடைய புடவையைத் துவைத்துக் கொண்டிருந்தாள். அதைப் பிடுங்கிக் கொண்டு, "மதனி, நீ வேணுமென்றே என் மேல் பழி தீர்க்கிறாயா? அண்ணா இரண்டு வார்த்தை என்னைச் சொன்னால் உனக்குத் திருப்தியா?" என்றாள் அழுது கொண்டே.


மதனி திகிலுடன் ராஜத்தைப் பார்த்து, "என்ன சொல்கிறாய், ராஜம்?" என்று கேட்டுக்கொண்டு அவள் முகத்தைப் பார்த்தாள்.

ராஜம் கண்களைத் துடைத்துக் கொண்டே, "நீ ஏன் என் புடவையைத் துவைக்கிறாய்? உனக்கு உடம்பு சரியில்லையென்றால் நான் வந்து துவைத்துக் கொள்ள மாட்டேனா?" என்றாள்.

"அண்ணா உன்னைக் கோபித்துக் கொண்டாரா, ராஜம்? நான் நிஜமாய்ச் சொல்லுறேன், எனக்கு அர்த்தமாதிரி நீ வசவு வாங்க வேண்டும் என்ற எண்ணமேயில்லை!" என்றாள் மதனி.

அன்றிரவு சாப்பாடு முடிந்து கூடத்தில் படுத்த ராஜத்துக்குத் தூக்கம் வரவில்லை. எதை எதையோ யோசித்துக்கொண்டிருந்த அவள் காதுகளில் அடுத்த அறையில் அவள் மதனி அண்ணனிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

"நீங்கள் சாயங்காலம் ராஜத்தை என்ன சொன்னீர்கள்? எனக்கு உடம்பு சரியில்லையென்றால் நான் புடவை துவைத்திருப்



பேனு? தெம்பாயிருந்தது; துவைத்தேன். பாவம் அந்தப் பெண் சாயந்திரம் கண்கலங்கி என்னிடம் வந்தது. அப்போது எனக்கு எவ்வளவு வேதனையாயிருந்தது தெரியுமா? தாயில்லாப் பெண்ணுக்கு நம்மால் அந்தக் குறையைத் நீக்க முடியவில்லையென்றாலும், ஏதோ கூடினவரை அவள் சந்தோஷமாயிருக்கப் பார்க்க வேண்டாமா? உங்களுக்கு ஒன்றுமே தெரிகிறதில்லை!" என்று மதனி அண்ணனைக் கண்டித்துக் கொண்டிருந்தாள்.

இதைக் கேட்ட ராஜத்தின் இதயம் வெடித்து விடும்போலிருந்தது. இவ்வளவு அன்பு நிறைந்த மதனியிடம் தான் கோபித்துக் கொள்வது எவ்வளவு பாவம் என்று எண்ணினாள்.

மறுநாள் காலை எழுந்து, "மதனி, என்னை மன்னித்து விடு. இத்தனை நாளாய் நான் உன்னைப் பற்றித் தவறாய் நினைத்திருந்தேன்" என்றாள். அவளையும் மீறி அவள் கண்களில் நீர் நிறைந்தது.

"நீ ஒரு தவறும் செய்யவில்லையே, ராஜம்!" என்று கூறித் தன் புடவைத் தலைப்பால் மதனி ராஜத்தின் கண்களைத் துடைத்தாள்.

பிறகு ஒரு வருஷம் அவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமாய்ச் சென்றது!

## 3

ராஜத்தின் மதனி ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். மூன்றாம் பாரத்துடன் படிப்பை நிறுத்திக்கொண்ட ராஜத்தினிடம்தான் ஒன்றரை வயதுவரை மணி வளர்ந்து வந்தான் என்று சொல்லலாம். அவளுடைய அண்ணா, "ஏன், ராஜம்! நாளைக்குக் கலியாணம் ஆகி, நீ புக்ககம் போகும்போது மணியை விட்டுவிட்டு எப்படியிருக்கப் போகிறாய்?" என்று கேலியாய்க் கேட்பான்.

அதற்கு மதனி, "மணியையும் கூட்டிக் கொண்டு போகிறாள் புக்ககத்துக்கு. கொஞ்ச நாளைக்கப்புறம், 'மணி, உன் அம்மா யாருடா?' என்று அவனைக் கேட்டால், 'எனக்கு அம்மாவைத் தெரியாது, அத்தையைத்தான் தெரியும்!' என்பான் அவன். நீங்கள்தான் பார்த்துக் கொண்டிருங்களேன், நான் பெற்றும் மணி ராஜத்தின் பிள்ளையாய்த்தான் வளரப் போகிறான்!" என்பாள்.

மணிக்கு ஒன்றரை வயதானபோதுதான் ராஜத்துக்கு விவாகமாயிற்று. அவள் புருஷன் பரம்பரைப் பணக்காரன். ஒரு ஜில்லா போர்டில் என்ஜினீயர் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ராஜத்துக்கு ஒரு மூத்த மைத்துனர் மட்டும்தான் இருந்தார். அவரும் வடக்கே எங்கேயோ வேலையாயிருந்தார்.

ராஜத்தைக் கொண்டுவந்து விடவந்த அண்ணனும் மதனியும், மூன்று நாள் ராஜத்தின் பக்கத்தில் தங்கினர். ராஜத்தின் கணவனிடம் ஒட்டிக்கொண்டு விட்டான் மணி. மூன்றாம் நாள் மாலை ரயிலுக்கு அண்ணனும் மதனியும் புறப்படும்போது, ராஜத்தின் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த மணியிடம், "நீ இங்கேயே இருக்கிறாயா?" என்று ராஜத்தின் அண்ணன் கேட்டான். "ஆகட்டும்" என்று சொல்லி விட்டான் மணி. ராஜத்தின் கணவன் சிரித்துக் கொண்டே, "மணிக்கு ஒரு தம்பியோ தங்கையோ பிறந்த பிறகு, அவனை எங்களிடமே விட்டு விடுங்கள்" என்றான்.

அண்ணன் சிரித்துக்கொண்டே, "அதற்குள் உங்களுக்கே ஒரு மணிப்பையன் பிறந்து விடுவான், மாப்பிள்ளை!" என்று மறுமொழி கூறினான்.

ஆனால் மனிதன் நினைப்பதொன்று, நடப்பது மற்றொன்று. ஆறு மாதம்தான் ராஜம் கணவனுடன் இன்பமாய் வாழ்ந்தாள். பிறகு அவள் வாழ்வில் இருள் சூழ்ந்து விட்டது. மூன்றே நாள் ஜுரத்தில் ராஜத்தின் கணவன் உயிர் நீத்தான். பூவும் மஞ்சளும் இழந்து பிறந்தகம் திரும்பினாள் ராஜம். அவளுடைய மூத்த மைத்துனர் ஒரு விசித்திர மனிதர். குடும்பச் சொத்தில் முக்கால் பங்கை ராஜத்துக்கு எழுதிக் கொடுத்துவிட்டு, அவர் வடக்கே சென்று விட்டார்.

ராஜத்தின் துயரத்துக்குச் சற்று ஆறுதல் கொடுத்தவன் மணிதான். அவன் அவளை விட்டுப் பிரியவே மாட்டான். ஆனால் சில சமயங்களில் தர்ம சங்கடங்கள் ஏற்படுவதும் உண்டு அவனால்.

ஒருநாள் மணியின் தாயார் குளித்துவிட்டு வந்து குங்குமம் இட்டுக்கொண்ட பின், குங்குமச் சிமிழைக் கீழ வைத்தாள். மணி அதை எடுத்துக் கொண்டு வந்து ராஜத்தினிடம் நீட்டி, "அத்தை, இந்தா!" என்று ஆரம்பித்தான். ராஜம் சிமிழை வாங்கிக் கீழே வைத்தாள். மணி விட

வில்லை. இதைக் கவனித்த மதனி ஓடோடியும் வந்து, "அத்தைக்கு வேண்டாமடா மணி, அதைப் பார்க்க உனக்கும் எனக்கும் பாக்கியம் இல்லையடா!" என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

வீட்டுத் தோட்டத்தில் பூச்செடிகள் பூத்துக் குலுங்கும். ஒருநாள் மாலை பூக்களைப் பறித்து மதனி தொடுத்துக் கொண்டிருந்தாள். தொடுத்துக் கீழே வைத்ததும் அந்தக் கதம்பத்தை எடுத்துக் கொண்டு அத்தையிடம் வந்தான் மணி. அத்தை வேண்டாம் என்றாலும் கேட்காமல், "தலையில் வைத்துக்கோ!" என்று ஆரம்பித்தான். பிடிவாதம் முற்றி அழுகையாயிற்று. உள்ளேயிருந்து அவன் அண்ணன் வந்து, "போடா, இங்கிருந்து!" என்று ஒரு அதட்டு அதட்டினான் தன் மகனை. மறு கணம் அவன் கண்களிலிருந்து பெரிய பெரிய நீர் முத்துக்கள் இரண்டு உருண்டு வந்து கன்னத்தில் விழுந்தன. குழந்தை மணி தாயிடம் போய் விட்டான்.

## 4

ஒரு வருஷம் சென்றது. ராஜத்தின் லக்ஷியமற்ற வாழ்க்கை ஊர்ந்து ஊர்ந்து சென்றது.

ஆனால் கடவுளுக்கு அது பொறுக்கவில்லை. அவளை மேலும் சோதிக்க எண்ணிவிட்டான் பரமன்.

மதனியின் தாயார், தன் சகோதரன் காலமானதும் சொத்து முழுவதையும் தன் மாப்பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டுக் காசிக்குப் போயிருந்தாள். ஆறு மாதம் வடக்கே தீர்த்த யாத்திரை செய்த பின் தன் வயோதிகக் காலத்தைப் பெண்ணுடன் கழிக்க எண்ணி வந்து சேர்ந்தாள்.

அந்த அம்மாள் பழைய காலத்து மனுஷி. ராஜம் ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருந்தால் பிடிக்காது. ஏதாவது நூல் வேலை செய்து கொண்டிருந்தால் பிடிக்காது. ஒருநாள் ராஜத்திடம், "உனக்கும் எனக்கும் இதெல்லாம் எதற்கு, ராஜம்? 'ராமா, ராமா' என்று ஜெபித்தால் போகிற வழிக்காவது புண்ணியமுண்டு!" என்றாள்.

இம் மாதிரி என்னவெல்லாமோ பேசி ராஜத்தின் மனதை அவள் புண்படுத்துவதுண்டு. ஒருநாள் 'லேடீஸ் கிளப்'புக்குப் போகும்போது மணியையும் அழைத்துச் சென்றாள் ராஜம். திரும்பி வரும்போது மிகரென்று அடை மழை பிடித்துக் கொண்டது. இருவரும் நனைந்துகொண்டு வீட்டுக்கு வர வேண்டியதாயிற்று. பேரன் நனைந்து கொண்டு வந்ததைப் பார்க்கச் சகிக்காமல் மதனியின் தாயார் தன் பெண்ணிடம், "உன் பிள்ளையாண்டான் சொட்டச் சொட்ட நனைந்து வந்திருக்கிறான். அவளுக்குத்தான் பொழுது போகவில்லையென்றால் கிளப்புக்குப் போகட்டும், வேறு எங்கே வேணுமானாலும் போகட்டும். தன்னுடன் குழந்தையையும் கூட்டிக் கொண்டு போவானேன்? நாளைக்குக் குழந்தைக்கு ஜுரம் வந்தால் என்ன செய்வது?" என்றாள்.

இதைக் கேட்டு ராஜம் திகைத்து நின்றாள். மதனி தன் தாயாரிடம், "அம்மா, குழந்தை ஒரு தடவை நனைந்து விட்டால் கரைந்து போய்விடுவானா? அப்படி செல்லமில்லை, என் குழந்தை! இத்தனை நாளாய் நீ ராஜத்தைக் குத்திப் பேசுவதைப் பொறுத்தேன். எதற்கும் ஓர் எல்லையுண்டு. அவள் மனம் என்ன பாடு படும் என்று யோசித்தாயா, அம்மா? பாவம், குழந்தைப் பிராயத்திலேயே அளவிலா சோகத்துக்கு ஆளாகி யிருக்கிறவளை ஏன் புண்படுத்துகிறாய்? என்னைவிட மூன்று வயது சின்னவள் அம்மா, அவள்! வருகிற ஆடியிலே பதினெட்டு வயது நிரம்பப் போகிறது! அவள் முகத்திலே நீ எப்பொழுதாவது சிரிப்பைப் பார்த்தாயா? கண்ணீர் விடாமல் இருக்கிறாளே, அது உனக்குப் பொறுக்கவில்லை! இனி அவளைப் பற்றி ஒரு வார்த்தை பேசலாகாது தெரியுமா?" என்றாள்.

பிறகு, அவள் ராஜத்தைப் பார்த்து, "அம்மா ஏது சொன்னாலும் நீ மனதிலே வைத்துக் கொள்ளாதே!" என்று கூறிவிட்டு 'விர்' ரென்று உள்ளே சென்றாள்.

மதனியின் தாயார், "உன்னிடம் இதுவும் கேட்கணும். இன்னமும் கேட்கணும், விசாலம்! எல்லாம் என் விதி!" என்றாள் அழுதுகொண்டே.

இனி இங்கே இருந்தால் மதனிக்கும் அவள் தாயாருக்கும் மனஸ்தாபம் வளரும் என்று எண்ணி, ராஜம் மறுநாள் தன்னுடைய அண்ணன், மதனி யாருடைய பேச்சையும் கேட்காமல் புக்ககத்துக்கு வந்துவிட்டாள்.

•  •  •

ஒரு வாரமாகி விட்டது. வந்து ஊரில் மணி என்ன செய்கிறானோ? அவன் இரவில்

ராஜத்தினிடம் கதை கேட்டுக்கொண்டே தூங்குவது வழக்கம். காக்கையையும் குருவியையும் காட்டி அவனுக்கு ராஜம் தான் சாதம் ஊட்டுவாள். ஒருக்கால் அவன் ராஜத்தை மறந்திருக்கலாம். குழந்தை தன் விளையாட்டில் எதையும் மறப்பது சகஜம்..........!

இவ்வாறு சென்ற அவளுடைய யோசனையைத் திடீரென்று தபால்காரனுடைய குரல் கலைத்தது.

அவன் கொடுத்த கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தாள் ராஜம். அவளுடைய மதனிதான் எழுதியிருந்தாள் :—

அன்புள்ள ராஜம்,

நேற்று மத்தியானம் உன் மருமகனை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. அத்தை தான் குளிப்பாட்ட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். ஆத்திரம் தாங்காமல் நானு அறை வைத்துக் குளிப்பாட்டினேன். அழுது கொண்டே சாப்பிட்டான். படுத்துத் தூங்கும்போதும் விக்கி விக்கி, "அத்தை, அத்தை!" என்று அழுது கொண்டே இருந்தான்.

நாளு நாளாக வாசலில் வண்டி வருகிற போதெல்லாம், "அத்தை வந்து விட்டாள், இந்த வண்டியில்தானே அத்தை ஊருக்குப் போனாள்?" என்று என்னிடம் ஓடிவந்து கேட்கிறான். அவனை விட்டு நீயும் எவ்வளவு மன வேதனையுடன் பிரிந்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன்.

நேற்று முன் தினம் உன் அண்ணா, "ராஜம் ஏன் திடீரென்று போனாள்?" என்று கேட்டார். என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

நேற்றுச் சாயங்காலம் உன் மருமகன் உன் அண்ணாவிடம், "அப்பா! அத்தை கிட்டப் போகணும்" என்று சொன்னான். உன் அண்ணா என்னைக் கூப்பிட்டு, "வருகிற ஞாயிற்றுக்கிழமை நான் இவனை ராஜத்தினிடம் கொண்டுபோய் விட்டுவிடப் போகிறேன்" என்றார். நானும் "சரி" என்று ஒப்புக் கொண்டேன்.

குழந்தை உன்னிடமே வளரட்டும். உன்னுடைய கண்ணீரை அவன் தன் பிஞ்சுக் கைகளால் துடைக்க முடிந்த அளவு துடைக்கட்டும்!

வேறு என்ன எழுத?

உன் மதனி,

விசாலம்.

ஒரே மூச்சில் கடிதத்தைப் படித்து முடித்தாள் ராஜம். தன்னுடைய மனச் சாந்தியைக் கருதித் தன் ஒரே குழந்தையையும் பிரிந்திருக்கத் துணிந்த மதனியை அவள் மானசீகமாக நமஸ்கரித்தாள்.

## அரங்கேற்றத் திருவிழா



சுசீலா



காமு

மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபையில் "சென்ற" 7-ம் ஞாயிற்றுக்கிழமை மாலை எள்ளும் போட்டால் விழுவதற்கு இடமில்லாமல் ரசிகர்கள் கூடியிருந்தார்கள். ஸ்ரீ வழுவூர் ராமய்யா பிள்ளையிடம் பரதநாட்டியக் கலை பயின்ற இரு குழந்தைகளின் அரங்கேற்ற விழாவை முன்னிட்டுத்தான். ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு பி.ஏ.பி.எல்., எம்.எல்.சி. அவர்களின் தலைமையில் மேற்படி அரங்கேற்றம் நடைபெற்றது. ஸ்ரீ பி. எஸ். சீனிவாசன் பி.ஏ. அவர்களின் செல்வக் குமாரி காமுவும், ஸ்ரீ ஜி. வி. ராமச்சந்திர ராவ் அவர்களின் அருமைப் புதல்வி சுசீலாவும் தாங்கள் அரிதிற் பயின்ற பரதநாட்டியக் கலையை அபூர்வமாக வெளிப்படுத்திச் சபையோரின் ஆசியையும் அபிமானிகளின் பரிசுகளையும் பெற்றார்கள். குழந்தைகள் காமுவுக்கும் சுசீலாவுக்கும் தீர்க்காயுளையும் சகல மங்களங்களையும் இறைவன் அளிப்பாராக.

# பாரதி மண்டப நிதி

இராணிப்பேட்டை ஸ்ரீ கே. ஆர். கல்யாணராம ஐயர் மூலம் வசூல் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| ஜனாப் எஸ். காதர் ஷெரீப் M. B. D. பஸ் ஓனர், ஆற்காடு | 200 | 0 | 0 |
| ஜனாப் ஏ. பி. முஹம்மது கனி மான், தோல் ஷாப்பு, ராணிப்பேட்டை | 100 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி பிலிம் டைரக்டர், மைலாப்பூர் | 101 | 0 | 0 |
| ஜனாப் வி. பக்கீர் முஹம்மத் சாஹெப், தோல் மண்டி, பெரியமெட் | 100 | 0 | 0 |
| ஜனாப் டி. எம். அப்துர் ரஹீம் சாஹெப், (மஹாராஜா பீடி) ராணிப்பேட்டை | 100 | 0 | 0 |
| ஸ்ரீ கே. ஆர். வி. பதி. நவ்ஹிந்துஸ்தான் பேப்ரிக்ஸ், குடியாத்தம் | 100 | 0 | 0 |
| ஸ்ரீமான்கள் ஏ. பி. ஜம்புலிங்க முதலியார் அண்டு ஏ. பி. பாலசுந்தர முதலியார், ஹைட் மர்ச்சண்ட்ஸ், ஆற்காடு | 76 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. ஆர். பச்சையப்ப முதலியார், ரேஷன் ஷாப்பு, ராணிப்பேட்டை | 51 | 0 | 0 |
| ஸ்ரீ கே. ஜானகிராம முதலியார், ஹோல்சேல் டீலர், ராணிப்பேட்டை | 51 | 0 | 0 |
| ஸ்ரீ வீரராகவ முதலியார் பி. ஓ. வி. ஏஜண்ட்ஸ், வாலாஜா | 51 | 0 | 0 |
| ஸ்ரீ பி. அன்னாமலை முதலியார், ஷிப்பிங் அண்டு கிளியரிங் ஏஜண்ட்ஸ், சென்னை | 51 | 0 | 0 |
| ஸ்ரீ டி. வி. ஆர். வெங்கடாஜலம் அண்டு கோ, பெரியமெட் (தோல்மண்டி) | 51 | 0 | 0 |
| ஸ்ரீ எஸ். கன்னைய செட்டியார் அரிசிமண்டி, ஆற்காடு | 51 | 0 | 0 |
| ஸ்ரீ எம். எஸ். சுந்தரமூர்த்தி முதலியார், மளிகை, ராணிப்பேட்டை | 51 | 0 | 0 |
| ஸ்ரீ எம். வஜ்ரவேலு முதலியார் அண்டு சன்ஸ், ஸ்ரீ ஆனந்தன் | 51 | 0 | 0 |
| ஸ்ரீ சுவாமிநாதய்யர், பஜார் கேப், ராணிப்பேட்டை | 51 | 0 | 0 |
| ஜனாப் ஏ. எம். நயீம் சாஹெப், தோல் ஷாப்பு, ராணிப்பேட்டை | 51 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. பி. சுப்ரமண்ய முதலியார், தோல்மண்டி, பெரியமெட் | 51 | 0 | 0 |
| ஸ்ரீ டி. எஸ். ஆர். சாமி ரைஸ் மில், ஆற்காடு | 51 | 0 | 0 |
| நவல்பூர் கிராம முன்னேற்றச் சங்கம், ராணிப்பேட்டை | 50 | 0 | 0 |
| ஸ்ரீமான்கள் எஸ். ஜே. அப்ரமேய ஐயர் அண்டு எஸ். ஜே. ராமநாத ஐயர், சரஸ்வதி லஞ்ச் ஹோம், ராணிப்பேட்டை | 35 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. சம்பத் நரசிம்மன், 'கல்கி' ஏஜெண்ட், ராணிப்பேட்டை | 25 | 0 | 0 |
| ஸ்ரீ வி. அருணாசல முதலியார், ஜவுளி, ராணிப்பேட்டை | 25 | 0 | 0 |
| ஸ்ரீ எம். கிருஷ்ணஸ்வாமி முதலியார், லாரி சர்வீஸ், வாலாஜா | 25 | 0 | 0 |
| ஸ்ரீ வி. டி. பார்த்தசாரதி அண்டு கோ, தோல்மண்டி, பெரியமெட் | 25 | 0 | 0 |
| ஸ்ரீ முத்துப் பிள்ளை, நவல்பூர் | 25 | 0 | 0 |
| ஸ்ரீ எம். பி. நாராயணசாமி அண்டு கோ, சென்னை | 25 | 0 | 0 |
| ஜனாப் எஸ். உமர் காகா சாஹெப், தோல்மண்டி, பெரியமெட் | 25 | 0 | 0 |
| ஸ்ரீ கொண்டா நரசிம்மய்யா, பட்டு வியாபாரம், வாலாஜா | 25 | 0 | 0 |
| ஜனாப் யூசுப் ஷெரீப், 'தினமணி' ஏஜெண்ட், ஆற்காடு | 25 | 0 | 0 |
| ஸ்ரீ கே. ஜனார்த்தன செட்டியார், துரை டாக்கீஸ், அரக்கோணம் | 25 | 0 | 0 |
| ஸ்ரீ வி. குப்புசாமி முதலியார், ஜவுளி, நாகவேடு | 25 | 0 | 0 |
| ஸ்ரீ ரங்கசாமி நாயகர், தோல் ஷாப்பு, ராணிப்பேட்டை | 25 | 0 | 0 |
| ஸ்ரீ வி. ராமநாதன், வெட்னரி சர்ஜன், ராணிப்பேட்டை | 25 | 0 | 0 |
| ஜனாப். இப்ராஹிம் சாஹெப், கன்ட்ராக்டர், ராணிப்பேட்டை | 20 | 0 | 0 |
| ஸ்ரீ ராமசுவாமிபிள்ளை, நவல்பூர் | 20 | 0 | 0 |
| ஸ்ரீ என். கே. எஸ். ராகவன், அசோஸியேடட் ஆட்டோ சர்வீஸ், சென்னை | 20 | 0 | 0 |
| ஸ்ரீ வி. வி. ராமநாத அய்யர், வக்கீல், ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ கே. வரதாச்சாரி, வக்கீல், ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ எஸ். பஞ்சாக்ஷரம், வக்கீல், ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ டாக்டர் குமாரசாமி, வாலாஜா | 10 | 0 | 0 |
| ஸ்ரீ டாக்டர். எம். ஆர். ராஜகோபால், ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ கே. ஜி. வில்வம், அக்ரிகல்சர் டிமான்ஸ்ட்ரேட்டர், வாலாஜா | 10 | 0 | 0 |
| ஸ்ரீ டி. ஆர். லோகநாதப் பிள்ளை, ரேஷன் ஷாப், ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ டி. பி. சந்திரசர்மா, அரிசிமண்டி, ஆற்காடு | 10 | 0 | 0 |
| ஸ்ரீ டி. எம். நாராயணசாமி, ஷாப், ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஜனாப். எஸ். இப்ராஹிம் சாஹெப், விசிறிபீடி | 10 | 0 | 0 |
| அதிகாரி. என். நாதய்யா, பட்டு வியாபாரம், வாலாஜா | 10 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. மாதவராவ், பாரி அண்டு கோ. | 10 | 0 | 0 |
| ஸ்ரீ வி. டி. சபாநாயகம். உதவி ஆசிரியர், போதனாமுறைப் பாடசாலை, ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ விஸ்வநாத செட்டி, ரேஷன் ஷாப், வாலாபேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ வி. என். முத்துசுவாமி ஐயர், உதவி என்ஜினியர் P.W.D. ராணிப்பேட்டை | 10 | 0 | 0 |
| ஸ்ரீ கே. வி. பொன்னுசுவாமி செட்டியார், காவனூர் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ துரைசாமி ஐயர், பாங்கர் அரக்கோணம் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தி, அட்வகேட், அரக்கோணம் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ எஸ். வேதாசல முதலியார், அட்வகேட், அரக்கோணம் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ டி. சின்னசுவாமி நாயுடு, ஷராப், அரக்கோணம் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ எம். கே. கண்ணப்ப முதலியார், அரக்கோணம் | 10 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ஆற்காடு குமாரபவன் ஸ்ரீ மணி மூலம் வசூல் ரூ. 65-க்கு விவரம்: | | | |
| ஸ்ரீ வி. எஸ். மணி அய்யர் | 25 | 0 | 0 |
| ஸ்ரீ எம். நடேச முதலியார், ஆற்காடு | 10 | 0 | 0 |
| ஸ்ரீ திருவண்ணாமலை, ரங்கநாத முதலியார், ஆற்காடு | 10 | 0 | 0 |
| ஸ்ரீ ராமலிங்க செட்டியார், ஆற்காடு | 10 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. ஆர். கிரத்ன முதலியார், ஆற்காடு | 5 | 0 | 0 |
| ஸ்ரீ ஏ. எஸ். டி. வேணுமுதலி, ஆற்காடு | 5 | 0 | 0 |
| ஸ்ரீ கே. எம். நடேச கவுண்டர், செட்டித்தாங்கல் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ ஸ்ரீனிவாசன் (ரெவினியூ இன்ஸ்பெக்டர்) மூலம் ஸ்ரீ அருணாசல முதலியார், பூட்டுதாக்கு | 10 | 0 | 0 |
| ஸ்ரீ கே. பி. நடேச முதலியார், ரேஷன் ஷாப், ராணிப்பேட்டை காரை | 6 | 0 | 0 |
| சில்லறை வசூல் | 19 | 0 | 0 |
| ஸ்ரீ எம். எஸ். நடேச நாயகர், கண்ட்ராக்டர், மேட்டூர் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ வி. எம். எஸ். மணி ஐயர், ராஜேஸ்வரி கேப், ராணிப் பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ ஜயராம் நாயுடு, தோல் ஷாப்பு, ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ என். நாகேஸ்வரன், லேபர் ஆபீசர், பாரி அண்டு கோ | 5 | 0 | 0 |
| ஸ்ரீ பி. கோபாலரத்னம், வக்கீல், ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ கொண்டா கிருஷ்ணய்யா, வாலாஜா | 5 | 0 | 0 |
| ஸ்ரீ என். டி. துரை, மளிகை, ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு, ஷாப், ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ டி. பாலகிருஷ்ணன், பொன்னாச்சி | 5 | 0 | 0 |
| ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணசுவாமி ஐயர், வக்கீல் ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ எம். ஆர். ஸ்ரீனிவாச நாயுடு, ஹெட்மாஸ்டர் பி. டி. ஸ்கூல், ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ வி. கிருஷ்ணன், செட்டித்தாங்கல் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ ஹரி. ராமசந்திரய்யா, வாலாஜா | 5 | 0 | 0 |
| ஜனாப். உமர்கத்தா சாஹெப், தோல் வியாபாரம், ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீனிவாசன், பாரி அண்டு கோ. | 5 | 0 | 0 |
| ஜனாப். காகாமொஹிதீன், ஜே. பீடி, ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| காவேரிப்பாக்கம் மாணவர் அகம். (ஸ்ரீ திருவேங்கட முதலியார் மூலம்) | 5 | 0 | 0 |
| ஸ்ரீ வி. எஸ். ராமநாதய்யர் மூலம் வசூல் ரூ. 23 0 0-க்கு விவரம்: | | | |
| காரைஸ்கூல் ஆசிரியர்கள் | 6 | 0 | 0 |
| மேற்படி ஸ்கூல் மாணவர்கள் | 4 | 0 | 0 |
| செங்காடு ஸ்கூல் ஆசிரியர்கள் | 5 | 0 | 0 |
| சில்லறை வசூல் | 8 | 0 | 0 |
| ஸ்ரீ எம். ஆர். கிருஷ்ணன், செண்ட்ரல் P.W.D. மூலம் வசூல் ரூ. 25 0 0-க்கு விவரம்: | | | |
| ஸ்ரீ எம். ஆர். கிருஷ்ணன் | 5 | 0 | 0 |
| தையல் தொழிலாளர் ஐக்ய சங்கம் | 5 | 0 | 0 |
| ஸ்கட்டர் ஆஸ்பிடல் | 9 | 0 | 0 |
| இதர வசூல் | 6 | 0 | 0 |
| ஸ்ரீமதி ருக்மணி மூலம் வசூல் ரூ. 20 0 0-க்கு விவரம் | | | |
| ஸ்ரீ பி. சம்பத் ஐயங்கார், வக்கீல் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ வீரராகவன், வக்கீல் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ சேஷாத்ரி, வக்கீல் | 5 | 0 | 0 |
| சில்லறை வசூல் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ ராமஸ்வாமி மூலம் வசூல் | 10 | 8 | 0 |
| மேற்படியார் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ சம்பத் நரசிம்மன் "கல்கி" ஏஜெண்ட் மூலம் சில்லறை வசூல் | 9 | 9 | 6 |
| வாலாஜா ஸ்ரீ கே. இ. விஸ்வம் அக்ரிகல்சர் டிமான்ஸ்ட்ரேட்டர் மூலம் சில்லறை வசூல் | 70 | 0 | 0 |
| ஆற்காடு டாக்டர் ஸ்ரீ நாகராஜன் மூலம் வசூல் ரூ. 71 14 6 க்கு விவரம்: | | | |
| ஸ்ரீ டாக்டர் ஏ. வி. நாகராஜன் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ எத்திராஜ் நாயகர், மாமண்டு | 10 | 0 | 0 |
| ஸ்ரீ கே. ஆர். மணி ஐயர், மணி கேப் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ பி. கே. ராமய்யர், ஆர்யபவன் | 10 | 0 | 0 |
| போதனாமுறைப் பாடசாலை ஆற்காடு | 10 | 14 | 6 |
| ஸ்ரீ ஜி. ஆர். குண்டு ராவ், டீபோர்டு | 5 | 0 | 0 |
| ஸ்ரீ குமரன் நாயர், ஜயாகேப் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ பரமேஸ்வரன் நாயர், மலபார் மிலிடரி ஹோட்டல் | 5 | 0 | 0 |
| சில்லறை வசூல் | 6 | 0 | 0 |
| ஸ்ரீ கிருஷ்ணசுவாமி, வாணாபாடி | 5 | 0 | 0 |
| ஸ்ரீ துரைசாமி செட்டியார், வாணாபாடி | 5 | 0 | 0 |
| ஸ்ரீ துரைசாமி ஐயர், தியாகராஜ லன்ச் ஹோம், வாலாஜா | 5 | 0 | 0 |
| ஸ்ரீ எம். ஆர். விஜயராகவன் பாரி அண்டு கோ | 5 | 0 | 0 |
| மேற்படியார் மூலம் சில்லறை வசூல் | 11 | 0 | 0 |
| லேடீஸ் கிளப் ரூ. 50 0 0-க்கு விவரம்: | | | |
| மிஸஸ் வேணு கோபால் | 5 | 0 | 0 |
| மிஸஸ் கணபதி | 5 | 0 | 0 |
| மிஸஸ் கே. பி. சீனிவாச ராகவாச்சாரி | 5 | 0 | 0 |
| மிஸஸ் கே. வரதாச்சாரி | 5 | 0 | 0 |
| மிஸஸ் சுந்தர்ராஜ் | 5 | 0 | 0 |
| மிஸஸ் ரங்கதுரை | 5 | 0 | 0 |
| சில்லறை வசூல் | 20 | 0 | 0 |
| சில்லறை வசூல் (ஸ்ரீ கல்யாணராம ஐயரிடம்) ரூ. 11 0 0-க்கு விவரம்: | | | |
| மிஸஸ் லக்ஷ்மீ கல்யாணராமன் | 5 | 0 | 0 |
| ஜே. வி. ஸ்கூல் | 4 | 0 | 0 |
| வாலாஜா ராஜம்மாள் | 2 | 0 | 0 |
| ஜனாப். அப்சன் சாஹெப், சோடா ஷாப், வாலாஜா | 5 | 0 | 0 |
| ஸ்ரீ எம். பி. ஸ்ரீநிவாசன், ராணிப்பேட்டை | 5 | 0 | 0 |
| மொத்தம் ரூ. | 2601 | 0 | 0 |
| பொதுக்கூட்டம், விளம்பரம் முதலிய செலவுகள் ரூ. | 221 | 15 | 9 |
| நிகர வரவு ரூ. | 2379 | 0 | 3 |

# பாணிக்கிரகணம்



கே. எஸ். எஸ். ராகவன்

ஒன்பதாம் அத்தியாயம்

## அழைப்பு

சாரங்கன் சிறையை விட்டு வெளியே வந்தவுடன் உறவினர்களையோ, நண்பர்களையோ பார்க்க முயற்சிக்கவில்லை. ஹோட்டலுக்குச் சென்று சாமான்கள், புஸ்தகங்களெல்லாம் என்னவாயின என்று பார்ப்பதற்காகப் புறப்பட்டான். ஹோட்டல் கேட்டில் ஒரு சின்னப் பையன் நின்று கொண்டிருந்தான்.

அவன் சாரங்கனைக் கண்டதும், "ஸார், ஸார்! உங்களுக்குச் சாரங்கன் என்பவரைத் தெரியுமா?" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டான்.

சிறையில் ஏற்படும் முதல் பழக்கம் எதையும் சந்தேகத்துடன் நோக்குவதுதான். ஆகவே, சாரங்கனும் "நீ யார், அப்பா? சாரங்கன் என்பவரிடம் உனக்கு என்ன வேலை?" என்று அவனைச் சந்தேகத்துடன் கேட்டான்.

"ஒண்ணுமில்லே, சாமி! பீச்சக்கரையில் சின்ன அம்மா அவர்கிட்ட இந்தக் கடிதாசியைக் குடுக்கச் சொன்னாங்க. நானும் அரை ரூபாய் காசுக்கு ஆசைப்பட்டு, சரின்னுட்டேன். இதுவரை பத்துப் பேருக்கு மேல் விசாரிச்சாச்சு. அவங்களுக்குத் தோணினதைச் சொல்லிட்டுப் போறாங்க. ஒத்தர் சொன்னார்: 'இங்கே அவரைத் தேடி என்ன பிரயோசனம்? ஜெயில்லேயோ, போலீஸிலேயோ விசாரி'ன்னு. எனக்கு ஒண்ணும் தோணலே. பேசாம கடிதாசைக் கிழிச்சுப் போட்டுட்டு வீட்டுக்குப் போகலாமான்னு பார்க்கிறேன்" என்று அந்தச் சின்னப் பையன் விடாமல் சொன்னான்.

"சர்தான் அப்பா! எனக்கு அந்த ஐயாவை நன்னாத் தெரியும். நான் கொடுத்து விடறேன்" என்று சாரங்கன் கையை நீட்டினான்.

பையன் கொஞ்சம் மேலேயும் கீழேயும் பார்த்து விட்டு ஒரு கவரைச் சாரங்கனிடம் கொடுத்தான்.

அவசரமாக அதை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு சாரங்கன் கடற்கரையை நோக்கி நடந்தான். ஹோட்டலுக்குப் போனால் எல்லோரும் தன்னைச் சூழ்ந்து

கொல்வார்கள் என்பது அவனுக்குத் தெரியும். கடிதத்தைப் படிப்பதற்கு அவகாசம் கிடைக்காது. சாரங்கன் மனம் அக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிற தென்பதை அறியத் துடியாய்த் துடித்தது. ஆவலை அடக்கிக்கொண்டு ஒருவரும் இல்லாத இடத்திற்குச் சென்று கடிதத்தை வாசித்தான்.

பிரியமுள்ள நண்பனுக்கு.

நான் யார் என்பதைப் பட்டவர்த்தனமாகச் சொல்ல விரும்பவில்லை. எட்டு மாதமாக உங்களை எனக்குத் தெரியும்; என்னை உங்களுக்குத் தெரியும். நாம் இருவரும் ஒரே நாளில் சிறை புகுந்தோம். இப்போது தெரிகிறதா, என்னை?

அது போகட்டும். நீங்கள் சிறையிலிருந்து இன்றைக்குத்தான் விடுதலை அடைந்தீர்கள் என்பது தெரிந்தது. இந்த 'விடுதலை'யைப் பற்றி நான் சந்தோஷமடையவில்லை; நீங்களும் சந்தோஷப்பட மாட்டீர்கள் என்பது என்னுடை நம்பிக்கை. நாம் பாரதீனமாக இருக்கும் வரையில் சிறைச்சாலையில் இருந்தாலென்ன, வெளியில் இருந்தாலென்ன?

உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன். ரொம்ப அவசரமான சமாசாரம். பரம ரகசியமாக இருக்க வேண்டியது. ஆறு மணிக்கு பைக்ராப்ட்ஸ் ரோட் மூலையில் நின்று கொண்டிருந்தால் நான் வந்து அழைத்துச் செல்கிறேன். இந்தக் கடிதம் யார் கையிலாவது சிக்கிய பிறகு உங்களிடம் வந்திருக்கிறது என்றோ, அல்லது யாராவது இதைக் கவனித்து விட்டார்கள் என்றோ நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள்கையில் சேரும் வரையில் நான் இதைக் கொண்டு வருபவனைக் கவனித்துக் கொண்டிருந்தேன். இந்தக்கடிதத்தை உங்களுக்கு அனுப்பியது என்னைக் கண்டவுடன் உங்கள் ஆச்சரியத்தை வெளியில் காண்பிக்கக்கூடாது என்பதற்குத்தான்.

உங்கள் பிரியமுள்ள,

'காம்ரேட்'

சாரங்கன் அக் கடிதத்தை யார் எழுதியிருக்கக்கூடும் என்பதைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. யுனிவர்ஸிடி கடிகாரத்தில் மணி ஐந்தடித்தது. ஒரு மணி நேரம் அங்கு மிங்கும் சுற்றிக்கொண்டிருந்த பிறகு பைக்ராப்ட்ஸ் ரோட் மூலையில் நின்றான்.

"என்ன மிஸ்டர் சாரங்கன்!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான்; கிருஷ்ண குமாரிதான். ஆனால் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சாரணர் வகுப்பில் சேர்ந்த பெண்கள் உடுத்தும் உடையைப் போட்டுக் கொண்டிருந்தாள். நீண்ட தலை மயிர் போய் 'பாப்' செய்துகொண்டிருந்தாள். கண்ணாடி வேறு.

சாரங்கன் அவளுடன் சென்றான். இருவரும் பஸ் நிற்கும் இடத்திற்கு வந்தார்கள். "கிருஷ்ண குமாரியின் கார் எங்கே, அவளுடைய அப்பா, அம்மா எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?" என்ற கேள்விகள் சாரங்கன் மனதில் எழுந்த போதிலும், கேட்பதற்கு இது சமயமல்ல என்று மௌனமாகவே இருந்தான்.

இருவரும் 'பாரீஸ் கார்னரி'ல் இறங்கினார்கள். பிறகு தம்புச் செட்டித் தெருவுக்குள் நுழைந்து அங்கே ஒரு மாடி வீட்டில் இருந்த கிருஷ்ண குமாரியின் அறைக்குச் சென்றார்கள்.

உள்ளே சென்றதும், "போங்கள்! என்ன, இது நாலாவது தடவை நான் இடம் மாற்றியது! போலீஸ்காரர்கள்கூட நம்மைச் சும்மா விட்டு விடுகிறார்கள்; அப்பப்பா! இந்த வீட்டுக்காரர்கள் கேட்கும் கேள்விகள்! நான் தனியாக இருப்பதைப் பற்றி அவர்களுக்கு எவ்வளவு கவலை!" என்று அலுத்துக் கொண்டாள் கிருஷ்ண குமாரி.

"அதிலென்ன பிசகு? இப்படித் தன்னந் தனியாக ஒரு பெண் இருக்கலாமா?" என்றான் சாரங்கன்.

"புரட்சி வீரரான சாரங்கனா இப்படிப் பேசுவது?" என்று கிருஷ்ணகுமாரி கேட்டு விட்டுக் கலீரென்று சிரித்தாள்.

உடனே குரலைத் தணித்துக் கொண்டு, "வீண் வம்பு எதற்கு? நான் உங்களைக் கூப்பிட்ட காரியத்தைச் சொல்லி விடுகிறேன்...... நான் ஒன்றும் பிரமாதமாகச் செய்து விடவில்லை ...... இருந்தாலும் நான் செய்யும் வேலைக்கு ஒத்தாசை வேண்டியிருக்கிறது. உங்களால் முடியுமா?" என்று கவலையுடன் கேட்டாள் கிருஷ்ணகுமாரி.

சாரங்கனுக்குச் சிறையிலிருக்கும் போதே சமாசாரம் பராபரியாகக் காதில் விழுந்தது. தமிழ் நாட்டிலும் ஒரு 'அண்டர் கிரவுண்ட்' வேலை செய்கிறது; அதில் முக்கிய பங்கு எடுத்துக் கொள்வது ஒரு பெண் என்றும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கனவிலும் அது கிருஷ்ண குமாரியாயிருக்கும் என்று சாரங்கன் நினைக்கவில்லை.

கிருஷ்ண குமாரிக்குச் சாரங்கன் மனதிலோடும் எண்ணங்கள் ஒருவாறு தெரிந்தன.

"மிஸ்டர் சாரங்கன்! நான் காலேஜில் படித்த கிருஷ்ணகுமாரி அல்ல...... மூன்று மாதச் சிறைவாசம் எனக்கு முப்பது வருஷ அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது. மனம் கல்லாய்ப் போய்விட்டது... பாருங்களேன், நான் போட்டுக் கொண்டிருந்த நகைகளை விற்றுத்தான் செலவு செய்கிறேன். அப்பாவையும் அம்மாவையும் பார்க்கக்கூட

இல்லை. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதுகூடத் தெரியாது.''

இந்தக் குட்டிப் பிரசங்கத்தைத் தனக்குத் தானே அவன் பலமுறை செய்து பழகி யிருக்க வேண்டும். ஏனெனில் கடைசி வார்த்தையில்கூட ஒரு கம்மல் இல்லை.

சாரங்கன் அவளைப் பின்பற்றுவது என்று உறுதி கொண்டான்.

## பத்தாம் அத்தியாயம்
## சதியாலோசனை

சாரங்கனும் கிருஷ்ண குமாரியும் அன்று வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ரயிலைக் கவிழ்ப்பதிலும், பாலத்தை உடைப்பதிலும் கண்ட பலன் என்ன? நம் ஜனங்கள்தானே விழுந்து படுகிறார்கள்?'' என்று சாரங்கன் சொன்னபோது, அவன் குரலில் கோபம் தொனித்தது.

"இதற்கெல்லாம் நாம் பச்சாதாபப்பட்டு முடியுமா? பெரிய ஆறு வெட்ட வேண்டுமானாலும் ஓர் இரண்டு வீடுகளை இடிக்க வேண்டி வரும்; வயல்களைத் தோண்டும்படி நேரும் ......முடிவில் நன்மைதானே உண்டாகப் போகிறது?'' என்றாள் கிருஷ்ணகுமாரி.

"அப்படியானாலும் அதற்கு வேறு வழியே யில்லையா?''


"என்ன வழி யிருக்கிறது? நாங்கள் ஓர் ஊருக்குப் போய் இரண்டு நாள் தங்கி ஜனங்களைத் தயார் செய்யலாமா என்று நினைக்கும்போதே, மிலிடரிக்காரர்கள் வந்து விடுகிறார்கள். ரயில் இருப்பதால் தானே அவர்களால் வர முடிகிறது? அதற்காகத் தண்டவாளத்தைப் பெயர்த்து எறிந்துவிட்டால் இரண்டு நாளில் கட்டி விடுகிறார்கள்; பாலத்தை இடித்தால் கொஞ்சம் அவகாசம் கிடைக்கிறது......பாருங்கள், எங்கள் வானர சேனை செய்த முன்னேற்பாட்டால்தானே சிவனேரிப்பக்கம் போலீஸ் புலிகளால் தலை காட்ட முடியவில்லை? சுற்றி ஐம்பது மைலுக்கு ஒரு பாலம் கூடக் கிடையாது. அறுக்காத தந்திக் கம்பியில்லை; இடிக்காத போலீஸ் ஸ்டேஷன் இல்லை. வானர சேனை என்றால் சிம்ம ஸ்வப்பனம் நம் போலீஸ் யானைகளுக்கு!''

"சரி, நீங்கள் இதையெல்லாம் செய்து என்ன சாதித்து விட்டீர்கள்?''

கிருஷ்ணகுமாரியின் முகம் சிவந்தது. இதுவரை ஒருவரும் அவளை இந்தக் கேள்வி கேட்டதில்லை. எல்லோரும் அவள் முன்னேற்பாட்டையும், போலீஸ் படையை முறியடித்த வீரச் செயல்களையும் போற்றினார்களே தவிர, இப்படி விஷயத்தைக் கூர்ந்து கவனிக்கவில்லை.

அவனுடைய கேள்விக்கு அவளால் நேராக ஒன்றும் பதில் சொல்ல முடியாமற் போகவே, "என்ன மிஸ்டர் சாரங்கன், நீங்கள்கூட இப்படிக் கேட்கிறீர்களே? அதற்குள் என்ன முடியும்? இப்போது நடப்பதெல்லாம் ஜனங்களைத் தயார் செய்வதற்காகத்தானே? நம் ஜனங்களுக்கு மட்டும் போலீஸ்காரர்கள் கடவுளின் திரு அவதாரம் இல்லை என்பது தெரிந்து விட்டால், இந்த பிரிட்டிஷ்காரர்களை ஒரே நாளில் விரட்டி அடித்துவிட மாட்டார்களா?'' என்றாள்.

"வாஸ்தவந்தான்; அந்தப் புத்தி அவர்களுக்கு வந்துவிட்டால் ஒரு நாளல்ல, அரை நாளில் கூண்டோடு கைலாசமாகப் பிரிட்டிஷ்காரர்களைத் துரத்திவிடலாம். ஆனால் இந்த



விஷயத்தை நம் ஏழு லக்ஷம் கிராமங்களிலிருக்கும் மடையர்கள் மண்டைகளில் ஏற்றுவதற்கு எத்தனை காலாகும் தெரியுமா? அதைவிடச் சுலபமான வேலை, நாமே பிரிட்டிஷ்காரர்களுடன் நேருக்கு நேர் நின்று யுத்தம் செய்வதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. நாம் அதற்குத் தயாரா? வெற்றி பெறுவோமோ? வீணாக உணர்ச்சிப் பெருக்கில் பெரிய காரியத்தில் இறங்கி விட்டு, பிறகு ஏமாந்து போவதில் பிரயோசனமில்லை. செய்வதைத் தீர ஆலோசித்துச் செய்யவேண்டும்; நம் பலம் நமக்குத் தெரியவேண்டும்; அதைவிட முக்கியமானது நம்முடைய பலஹீனத்தை நாம் உணர்வதே!'' என்றான் சாரங்கன்.

கிருஷ்ணகுமாரி சிறிது நேரம் பதில் பேசவேயில்லை. ஆனால் சாரங்கனுடைய வாதத்தில் உண்மையிருக்கிறதென்பதை அவள் உணர்ந்தாள்.

"அது சரி, நான் இப்போது என்ன செய்கிறது? என்னை மேதாவி என்று நினைத்துக் கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான பேரிடம் 'நான் ஒரு மகா முட்டாள். என் வழியைப் பின் பற்றாதீர்கள். இதில் தோல்விதான் நிச்சயம். பிரிட்டிஷ்காரர்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு உயிர் பிழையுங்கள்' என்று சொல்லட்டுமா? அதற்கப்புறம் நான் தற்கொலை செய்து கொள்வதா, அல்லது என் உபதேசத்தைப் பின் பற்றி நானும் சரணாகதி அடைவதா?'' என்று துக்கம் தோய்ந்த குரலில் கேட்டாள்.

சாரங்கனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. "நான் ஏதோ ஒரு விஷயத்தின் இன்னொரு பக்கத்தையும் எடுத்து வாதித்ததற்காக இப்படி குயுக்தி யெல்லாம் சொல்கிறாயே? நான் சொல்வதைக் கேள்: வடக்கே பெரிய தலைவர் ஒருவர் சிறையிலிருந்து தப்பி வந்திருக்கிறாராம்; மற்றும் சிலர் 'அண்டர் கிரவுண்டி'ல் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைக் கலந்து ஆலோசிப்போம். அதற்கு நீ வர வேண்டாம். நான் போய்விட்டு ஒரு வாரத்தில் வந்து விடுகிறேன். எல்லாம் நல்லபடியாக இருந்தால் இங்கேயே சந்தித்து மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனிக்கலாம்'' என்றான்.

கிருஷ்ணகுமாரி, "நானும் வருவேன்'' என்று பிடிவாதம் செய்வாளோ என்று சாரங்கன் பயந்தான். ஆனால் அவளோ, "சரி, அப்படியே செய்யலாம்'' என்று சொல்லிவிட்டாள். இது அவனுக்கு ஆச்சரியத்தை — ஏன், ஏமாற்றத்தைக் கூடத் தந்தது.

இரண்டு நாளைக்குப் பிறகு சாரங்கன் செண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பம்பாய்க்குப் போகும் ரயிலில் ஏறி நின்றான். மூன்றாவது வகுப்பு வண்டிதான். அதிகக் கூட்டம் இல்லை. ஆனாலும் அதில் வருபவர்களில் எத்தனை பேர் ஸி. ஐ. டி.க்காரர்களாக இருப்பார்கள் என்று சாரங்கன் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

"இதோ, தாடி வைத்துக் கொண்டிருக்கிறானே ஓர் ஆசாமி, இவன் கையில் மூட்டையும் இல்லை, முடிச்சுமில்லை. இவனுக்கென்ன வேலை இருக்கப் போகிறது பம்பாயில்? இவனிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். இதோ உட்கார்ந்து கொண்டிருக்கிறானே, அப்பாவி மாதிரி ஒருவன், நிஜமாகவே இவன் அப்பாவியா, அல்லது ஸி. ஐ. டி. வேஷமா? இது என்ன 'பர்தா'வில் இருப்பவர் நிஜமாகவே ஸ்திரீதானா, அல்லது ஸி. ஐ. டி.க்காரன்தான்......''


அதற்குள் ரயில் ஊதி விட்டது..... ஐயையோ! இதென்ன, தாடிக்காரர் மளமளவென்று இறங்கி யல்லவா போகிறார்! 'பர்தா' ஸ்திரீயும் அவரை நன்றாகப் பார்ப்பதற்காக முட்டாக்கைக்கூட எடுத்துவிட்டாளே! அந்த 'அப்பாவி' மனுஷர் சாரங்கன் போட்டிருந்த படுக்கையை [illegible]காக நகர்த்திவிட்டு அவருடைய படுக்கையை யல்லவா விரித்து விட்டார்!

தன் தப்பறியும் திறமையைப் பற்றி நினைக்கும்போது சாரங்கனுக்குச் சிரிப்பு வந்தது. தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். பாவம், பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த பார்ஸி ஸ்திரீக்கு இரண்டாம் வகுப்பு டிக்கெட் கிடைக்கவில்லை போலிருக்கிறது! மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வது இதுதான் முதல் தடவையாயிருக்க வேண்டும், அவ்வளவு சிரமப்பட்டாள் உட்காருவதற்கும், சாமான்களை வைத்துக் கொள்வதற்கும்.

"Are you also going to Bombay?" ("நீங்களும் பம்பாய்க்குப் போகிறீர்களா?") என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான் சாரங்கன்.

அப்பொழுதுதான் அவனுக்குக் கிருஷ்ணகுமாரி ஏன் இத்தனை காலாய்ப் போலீஸ்காரர்கள் கையில் சிக்கவில்லை என்பது தெரிந்தது!

(தொடரும்)



# கர்வம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நிர்மலாவுக்குச் சத்தியமூர்த்தியை நேரே சந்திக்கச் சற்று அச்சமாகத்தான் இருந்தது. பல தடவை அவளுக்கு அவனைச் சந்திக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. அப்பொழுதெல்லாம் மூர்த்தி அவளைப் பார்க்காதது போலச் சென்றுவிடுவான். அதனால் அவளே அவனைச் சந்திக்காமல் இருக்கத் தன்னால் முடிந்த வரையில் முயன்று வந்தாள்.

இவைகளை யெல்லாம் யோசித்தவாறே பல சந்தேகங்களுடன் லீலாதேவியைத் தேடிச் சென்றாள் நிர்மலா. லீலா தேவி அவளுடைய உபாத்தியாயினியாதலின் அவளிடம் நிர்மலா மனம் விட்டுப் பேச முடியும்.

டாக்டர் லீலா இலவச வார்டில் இருந்தாள். நிர்மலா அவளிடம் சென்று, "உங்களிடம் ஒன்று பேச வேண்டும்" என்றாள். லீலா, "இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டு கூடவே கிளம்பினாள். அதற்குள் ஒரு நோயாளி, "டாக்டர் மூர்த்தி எப்போ வருவார்?" என்று கேட்டான். "வருவார்!" என்று புன்முறுவலுடன் பதிலளித்துவிட்டு, நிர்மலாவுடன் பேசிக் கொண்டே வெளியே வந்தாள் லீலா.

"என்ன, அந்த டாக்டர் மூர்த்திக்கு அவ்வளவு மகிமை! எங்கு பார்த்தாலும் அவர் புகழாகவே இருக்கிறதே!" என்று சொல்லிச் சிரித்தாள் நிர்மலா.

"ஆமாம். அவர் மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது. இந்த ஏழை ஜனங்கள் அவரை 'சற்குண மூர்த்தி' என்கிறார்கள்."

"இது என்ன புதுமை! அவரவருக்குத் தோன்றிய பெயர் இடுவதா?"


"நாங்களெல்லாம்கூட ஒரு பெயர் வைத்திருக்கிறோம், சாமர்த்திய மூர்த்தி என்று. அவரிடம் வேலை செய்தால் நீயும் அப்படியே ஆகிவிடுவாய்."

"ஆமாம், அதுதான் நான் கேட்க வந்தது" என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தாள் நிர்மலா.

இருவரும் பேசிக்கொண்டே சென்றார்கள். இறுதியில் டாக்டர் மூர்த்தியின் விஷயத்தை மறுபடியும் ஞாபகப்படுத்தி விட்டு வீட்டுக்குக் கிளம்பினாள் நிர்மலா. அவள் சென்றதும் லீலா மூர்த்திக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள்.

• • •

மூர்த்தி லீலாவின் கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தான். அவனைத்



அநுத்தமா

தன் வீட்டில் நடக்கும் ஒரு டென்னிஸ் விருந்துக்கு அழைத்திருந்தாள் நிர்மலா. கடைசியில், "ஒரு பெண் உங்களிடம் வேலை பழக விரும்புகிறாள். வெகு புத்திசாலி. இந்த வருஷம் ராஜதானியிலேயே முதலில் தேறியிருக்கிறாள். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவள்தான். எனக்கு அவள் மிகவும் வேண்டியவள்" என்றும் எழுதியிருந்தாள்.

மூர்த்தி உடனே பதில் எழுதி அனுப்பி விட்டான். அதில், "உனக்குப் பிடித்தால் எனக்கும் பிடிக்கும். அவளும் டென்னிஸ் விருந்துக்கு வருவாள் என்று நம்புகிறேன்" என்று எழுதியிருந்தான்.

மூர்த்தி அன்று மாலை லீலா வீட்டுக்குச் சென்றபோது அவளைத் தவிர மூன்று பெண்களும் இரண்டு வாலிபர்களும் வந்திருந்தார்கள். அதில் ஒரு பெண் நிர்மலா. மற்றொரு பெண் பத்மா. மூன்றாவது பெண்தான் அவனுக்கு யாரென்று தெரியவில்லை. அவன்பார்ப்பதற்கு வெகு சுட்டிகையாகவும் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டும் இருந்தாள். அவள்தான் லீலா எழுதிய பெண்ணாக்கும் என்று நினைத்துக் கொண்டான் மூர்த்தி. அந்த இரண்டு வாலிபர்களும் மூர்த்திக்குத் தெரிந்தவர்களே. ஒருவர் பத்மாவின் கணவர். இன்னொருவர் லீலாதேவியின் கணவர் ராம்நாத். அவர் எல்லோரையும் டென்னிஸுக்கு அழைத்தார். டென்னிஸ், சிற்றுண்டி அருந்திக் கொண்டே எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். பத்மாவின் கணவர், "மூர்த்தி, உன் கதைகள் ஏதாவது சொல்லேன்" என்றார். மூர்த்தியும்சொன்னான். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். கதை சொல்லும்போது அவன் முகம் ஒரு புதிய ஒளியுடன் பிரகாசித்தது. அவன் சிரிப்பே ஒரு தனி வகை. நிர்மலா ஸ்தம்பித்து விட்டாள். இந்த மூர்த்தியை அவள் இது வரை பார்த்ததே யில்லை.

சிற்றுண்டி, டென்னிஸ் முடிந்ததும் எல்லோரும் டென்னிஸ் ஆடக் கிளம்பினார்கள். லீலாவும் மூர்த்தியும் மட்டும் போகவில்லை. நிர்மலாவும் கால் சுளுக்கிக் கொண்டிருப்பதாகக் கூறி நின்று விட்டாள். உண்மைக் காரணம் என்னவோ அவள் மனதிலிருந்த ஆசை நிறைவேறுமா என்பது தான். லீலாவுக்காகப் பொறாமையாகக் காத்துக்கொண்டிருந்தாள். லீலாவோ பல அலுவல்களுடன் அங்கேயும் இங்கேயும் திரிந்துகொண்டிருந்தாள். நிர்மலாவும் மூர்த்தியும் தனிமையில் விடப்பட்டனர்.

நிர்மலா தானே பேசவோமா என்று நினைத்தாள். ஆனால் தைரியம் வரவில்லை. மூர்த்தி அவள் இருப்பதை அறிந்தவனாகவே காணப்படவில்லை. பேசாமல் ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தான்.

"சரி, கேட்டுத்தான் பார்ப்போமே!" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு பேச வாயெடுத்தாள் நிர்மலா. நா எழவில்லை. கொஞ்சம் சமாளித்துக் கொண்டு பேசப் பிரயத்தனிப்பதற்குள் மூர்த்தி எழுந்து டென்னிஸ் கோர்ட்டை நோக்கி

நடக்கலானான். நிர்மலா சற்று நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். பிறகு தானும் விளையாட்டைக் கவனிக்க அங்கே சென்றாள்.

அங்கு லீலாவதியும் வந்தாள். "என்ன மூர்த்தி, ஏன் மௌனம்?" என்றாள்.

"பின்னே என்ன செய்ய? புத்திசாலியாகப் பேசுபவள் நீ ஒருத்திதான். நீதான் எங்கேயோ சுற்றிக்கொண்டிருக்கிறாயே!"

லீலா கலகலவென்று சிரித்தாள்.

நிர்மலாவுக்கு சுருக்கென்றது. தன் சுயமரியாதைக்கு ஒரு சாட்டை அடி கிடைத்ததாகவே எண்ணினாள்; பொருமினாள். "என்ன மண்டை கர்வம்?" என்று நினைத்துக் கொண்டாள். அவளுடைய பழைய அருவருப்பெல்லாம் திரும்பிவந்தது. அப்போது லீலா, "இதோ பார், மூர்த்தி! நிர்மலா ஒரு புத்திசாலியான பெண். இவளைப் பற்றித்தான் உனக்கு எழுதியிருந்தேன். நிர்மலா, இவர்தான் டாக்டர் மூர்த்தி!" என்று அறிமுகப்படுத்தினாள்.

மூர்த்தியின் முகம் மாறிவிட்டது. "நாங்கள் முன்பே சந்தித்திருக்கிறோம்" என்றான் சுருக்கமாக.

"ஆமாம், இவர்தான் அம்மாவின் டாக்டர்!" என்று சொல்லி லேசாகச் சிரித்தாள் நிர்மலா. அவன் முகம் சிவந்தது.

லீலா இருவர் முகத்தையும் கவனித்தாள். மூர்த்தி சங்கோசப்படுவதாய் நினைத்துக்கொண்டு தனியாக விட்டால் சரியாகிவிடும் என்று போய்விட்டாள். இருவருக்கும்



லீலா போனது மிகவும் கஷ்டமாய் இருந்தது. பேசாமல் மௌனமாக இருந்தார்கள்.

நிர்மலா ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். "எனக்கும் புத்தி உண்டு என்று காண்பிக்கிறேன்!" என்று அவள் சங்கல்பம் பண்ணிக் கொண்டாள்.

மூர்த்தி அவள் பக்கம் திரும்பினான்.

"நீ முதலில் தேறினாயா?"

"நீயாம் நீ! விலைக்கு வாங்கினாற்போல!" என்று முணுமுணுத்தாள் நிர்மலா.

"என்ன சொன்னாய்?"

"ஒன்றுமில்லை; அதாவது 'ஆமாம்' என்றேன்!"

"சரி" என்று தலையை ஆட்டிவிட்டு, டென்னிஸ் ஆடுபவர்களைக் கவனிக்கலானான் மூர்த்தி. நிர்மலா சற்றுத் தைரியத்துடன், "லீலா சொன்னாளா?" என்று கேட்டாள்.

"உம்...."

நிர்மலா விடவில்லை. "அப்படியானால், உங்களுக்குச் சௌகரியப்படுமா?" என்று மேலும் கேட்டாள்.

அதற்குப் பதில் கூறாமல் அவளைச் சற்று நேரம் கூர்ந்து கவனித்தான் மூர்த்தி. நிர்மலா தலை கவிழ்ந்தாள். மறு கணம் மூர்த்தி ஆடுபவர்களை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தான். உரத்த குரலில் பத்மாவைத் தூண்டினான். லீலாவின் கணவரை மெச்சினான்.

நிர்மலாவினால் அவன் கவனத்தைத் தன் வசப்படுத்த முடியவில்லை. திடீரென்று அவளுக்கு ஞானமணி சொன்னது ஞாபகம் வந்தது, அவன் பெண்ணிடத்தில் அவனுக்கு உயிர் என்று.

"ஞானமணி அவளைப் பற்றி எப்பொழுதும் பேசிக் கொண்டே யிருப்பாள். உங்கள் பெண்ணின் பெயர் என்ன?" என்று பேச்சை ஆரம்பித்தாள்.

மூர்த்தி திரும்பினான். பதில் சொல்லுவதற்கு முன் ஒரு கணம் தயங்கினான். பிறகு, "ஏன், ஞானமணி பெயர் சொல்லவில்லையா?" என்றான். அவன் உதடுகளில் ஒரு கேலிப் புன்னகை மின்னல் போல் தோன்றி மறைந்தது.

நிர்மலா நாக்கைக் கடித்துக் கொண்டாள். மறுபடியும் சற்றுத் துணிச்சலுடன், "உங்கள் மனைவியின் பெயரை மாத்திரம் தான் சொன்னாள்" என்றாள்.

மூர்த்தியின் முகத்தில் வேதனையின் குறிகள் தென்பட்டன. நிர்மலா சற்றுச் சந்தோஷமே அடைந்தாள்.

“அவன் பெயர் ஜயம்” என்றான் மூர்த்தி.

“எவ்வளவு பொருத்தம்! சாந்தமும் சத்தியமும் சேர்ந்தால் ஜயந்தானே விளையும்!”

“எனக்குக் கவிதா சக்தி கிடையாது!” என்று சட்டென்று சொன்னான் மூர்த்தி. முகத்தில் அடித்தாற்போல் இருந்தது நிர்மலாவுக்கு. அவள் பொறுமையை இழந்தாள்.

“என்னைப் புகழ்கிறீர்களா?”

‘எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்’ என்னும் பாவனையில் மூர்த்தி தோளைக் குலுக்கினான்; கையை விரித்தான்; முகத்தைச் சுளித்துக் கொண்டு உதட்டைப் பிதுக்கினான்.

இந்த மௌனச் சாட்டை—அடி சற்று பலமாகவே விழுந்தது. நிர்மலாவின் கோபம் தலைக் கேறியது. அவன் தன்னை அவமரியாதையாக நடத்தினதாகவே கருதினாள். சட்டென்று எழுந்து லீலாவிடம் சென்று தலைவலி என்று சாக்குச் சொல்லி விட்டு விடை பெற்றுக் கொண்டாள்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. நிர்மலாவின் மனதில் மூர்த்தி செய்த காயம் பச்சையாகவே இருந்தது. அவ்வப்போது தனது மனச்சிந்தனையால் அதைத் தூண்டி ஆறாமல் வளர்த்து வந்தாள் அவள். அவள் உடம்பில் ஒவ்வொரு நரம்பும் பழிக்குப் பழி வாங்கத் துடித்துக்கொண்டிருந்தது. அவள் தகப்பனாரும் அவ்வப்போது தனது அனுதாப மொழிகளால் அவளது கோப அனலுக்குத் தூபம் போட்டு வந்தார்.

பார்வதி அம்மாள் தன் பெண்ணைக் கூர்ந்து கவனித்து வந்தாள். கடைசியில் ஒரு நாள் அவளைக் கூப்பிட்டு அவளுக்குப் புத்திமதி கூறினாள்.

“நிர்மலா, நீயோ படித்த பெண். நான் படிக்காத பழைய காலத்து மூடம். ஆனாலும் நான் அனுபவசாலி. ஒன்று சொல்லுகிறேன், கேள். நீ ஏன் இயற்கைக்கு விரோதமாகப் போகப் பார்க்கிறாய்? உங்கள் காலம் வேறே, எங்கள் காலம் வேறே! உங்கள் காலத்தில் நீங்களேதான் சமாளித்துக்கொள்ள வேண்டும். அன்பை அன்பினால்தான் அடைய முடியும். இயற்கைக்குப் பணிந்து நட. இல்லாவிட்டால் மனதை அடக்கு. உன் தொழில் உனக்கு எந்த நாளும் சாந்தி அளிக்கும்.”

தன் தாயின் மொழிகள் அனைத்தும் வாஸ்தவம் என்று நிமிஷமொன்று அப்பொழுது தான் வெளிச்சமாயிற்று நிர்மலாவுக்கு. அம்மாவின் நீண்ட்ய திருஷ்டி தான் என்ன! இவளா படிக்காத மூடம்? விவேகத்தின் சிகரமல்லவா?

நிர்மலா தன் தாயின் மடியில் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

* * *

இதே சமயத்தில் மூர்த்தியின் வாழ்க்கைச் சகடமும் கரடுமுரடான பாதையில் சென்று கொண்டிருந்தது. அவன் பெண் ஜயாவுக்கு ஏதோ ஜுரம் கண்டது. ஆனால் நிமிஷமொன்று அவ்வளவு விபரீதமாக மூளை ஜுரமாக மாற வேண்டுமா?

பணத்தை ஜலமாக செலவழித்தான் மூர்த்தி. நர்ஸுகளை அமர்த்தினான். ஜுரம் மட்டும் குறையவில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. மருந்தினால் ஆவது இனி ஒன்றுமில்லை என்று அவன் மனதில் பட்டது. குழந்தை கேட்பதைக் கொடுப்பதே சிறந்த மருந்து என்று அறிந்தான் அவன். ஆனால் குழந்தை கேட்பதைக் கொடுக்க யாரால் முடியும்!

“சாந்தம்மாவைக் கொண்டு வா!”—இதுதான் அவள் சதா கேட்டுக்கொண்டிருந்த ஒரே வேண்டுகோள்.

அவன் என்ன செய்வான், பாவம்! தவியாய்த் தவித்தான். முன்னொரு நாள் தான் செய்த முட்டாள்தனத்தை நினைத்துத் தன்னைச் சபித்துக் கொண்டான்.

ஒரு நாள் ஜயா மேஜைமேல் இருந்த சாந்தாவின் போட்டோவைப் பார்த்து, “இது யார், அப்பா?” என்று கேட்டாள்.

“அது உன் அம்மாடா, கண்ணு!”

“அவள் எங்கே இப்போ?”

“சாமி அழைச்சிண்டு போயிட்டார், அம்மா!”

“அப்பமன்னு இங்கே வரவே மாட்டாளா?”

“மாட்டாம்மா!”

தொண்டையை அடைத்தது மூர்த்திக்கு.

தான் இவ்வாறு அவளுக்குச் சொன்னது மடத்தனம் என்று இப்போது மூர்த்திக்குத் தோன்றிற்று. நெற்றியில் குட்டிக் கொண்டான். மனதை தொந்து கொண்டான்.

“அப்பா!” என்ற குழந்தையின் குரல் அவனைச் சிந்தனையி லிருந்து எழுப்பியது.

“ஏண்டாம்மா!”

“சாந்தம்மா குடுக்கமாட்டே?”

கண்களை மெள்ள மெள்ள விழித்தான் ஜயா. ஜன்னியில் ஏதேதோ பிதற்றினான்.

மூர்த்தி லீலாதேவியிடம் ஓடினான். அவளை அழைத்து வந்தான். "இதோ சாந்தம்மா!" என்று அவளைக் காட்டினான் குழந்தைக்கு. குழந்தை அர்த்தக் குழப்பத்திலும் தலையை அசைத்தது.

"இல்லே, பொய் சொல்றே அப்பா!— லீலா மாமி!"

அதேமாதிரி, "நீ பாட்டி! — நீ மணி!" என்று தன் பாட்டியையும் ஞானமணியையும் அனுப்பிவிட்டான் அவன். தனக்கு அறிமுகமில்லாத அம்மாளைக் கேட்டான். காமாக்ஷி அம்மாள் இதை ஒரு துர்க்குறியாகவே கருதினாள். அவள் வயிறு பகீரென்றது. "என் வயிற்றில் பாலை வாரம்மா, சாந்தா!" என்று மருமகளை வேண்டிக் கொண்டாள்.

ஜுரம் பிடித்துப் பத்து நாட்களாகி விட்டன. ஒரு வாரமாகத் தூக்கமே யில்லை. அன்றும் தூக்காவிட்டால் அவன் பிழைப்பதே துர்லபம் என்று அறிந்தான் டாக்டர் மூர்த்தி. சாந்தாவின் படத்தின் அருகில் சென்று, "சாந்தா, அவனையாவது எனக்கு விட்டு வை!" என்று கதறினான்.

குழந்தை வாய் ஓயாமல் அதே கேள்வியைத்தான் கேட்டான். மூர்த்தி மனதைக் கல்லாக்கிக் கொண்டான். அலைகளின் ஓசையில் சாந்தியைத் தேடினான். சமுத்திரத்தின் மணலில் நிம்மதியை நாடினான்.

நிர்மலா ஞானமணியின் மூலம் மூர்த்தியின் வீட்டு விஷயங்களை அறிந்தாள். அவளுக்கு ஜயாவைப் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆசை தோன்றிற்று. ஆனால் அவன் வீட்டுக்குப் போகக் கூச்சப்பட்டாள். கடைசியில் ஆசையே வெற்றி பெற்றது.

"டாக்டர் மூர்த்தி இருக்கிறாரா?"

கதவைத் திறந்த காமாக்ஷி அம்மாள், "யாரம்மா நீ?" என்று கேட்டாள்.

நிர்மலா தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, குழந்தையைப் பற்றிக் கண்ணீர் வடித்தாள்.

நிர்மலா குழந்தையின் அருகில் சென்று உட்கார்ந்தாள். ஜயா கண்ணைத் திறந்து, "யார், அது?" என்று கேட்டான். வாடின முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. மங்கின சிறு கண்கள் ஒளி பெற்றன. "சாந்தம்மா!" என்று குழந்தை ஆவலுடன் தன் சின்னஞ் சிறு கைகளை நீட்டினான்.

நிர்மலாவின் கண்களில் நீர் ததும்பியது. அவளால் பேச முடியவில்லை. தன் கைகளால் ஜயாவைத் தழுவிக் கொண்டாள். 'ஜயம்மா, நீ தூங்கம்மா!" என்றாள். அவள் நாக் குழறியது.

"நீ இங்கேயே இருக்கயா?" என்று கேட்டான் குழந்தை.

"இங்கேயே இருக்கேன்."

"விட்டுட்டுப் போகமாட்டாயே?"

"மாட்டேன்!"

குழந்தையும் அவளுடைய அணைப்பில் தூங்கிவிட்டான். நிர்மலா அசையாமல் நெடு நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தாள். பிறகு மெதுவாகக் குழந்தையைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு, மறுநாள் வருவதாகக் கூறிச் சென்றாள்.

மூர்த்தி திரும்பி வந்தான். ஜயா தூங்குவதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அவன் உள்ளத்தைப் பிளந்துகொண்டு ஒரு பெருமூச்சு வெளி வந்தது. அன்றிரவு முழுவதும் தூங்கும் குழந்தையின் அருகிலேயே உட்கார்ந்திருந்தான். காலையில் விழித்துக் கொண்டு, "பசி!" என்றான் ஜயா. கஞ்சியை ஆவலுடன் குடித்தான்.

"அப்பா, நேற்று சாந்தம்மா வந்தாப்பா! என்னைத் 'தூங்கும்மா' என்றாள். நான் தூங்கி விட்டேன்."

மூர்த்தியின் உடம்பு சிலிர்த்தது. மனதிற்குள் சாந்தாவிற்கு ஒரு தரம் நன்றி செலுத்தினான். அந்த நன்றிக்குப் பாத்திரம் ஒரு பிரத்தியக்ஷத் தெய்வம் என்று அவனுக்குத் தெரியாதல்லவா?

ஜயா படிப்படியாய்க் குணமடைந்து வந்தான்.

இதற்கு முக்கிய காரணம் நிர்மலாதான் என்று சொல்லத் தேவையில்லை. அவள், மூர்த்தி இல்லாத சமயத்தில் வருவதும், பாட்டிக்கு ஆறுதல் கூறுவதும், பேத்திக்குச் சிசுருஷை செய்வதும் தினசரி நிகழ்ச்சிகளாகிவிட்டன. காமாக்ஷி அம்மாளிடம் இதற்குப் பதிலாக அவள் தான் வருவது மூர்த்திக்குத் தெரியக் கூடாது என்று கேட்டுக் கொண்டாள்.

ஒரு நாள் ஜயா அப்பாவிடம் சொன்னான்:

"அப்பா, சாந்தம்மா சொல்றாள், நான் அவளை இனிமேல் சாந்தம்மான்னு கூப்பிடக் கூடாதாம். டாக்டர் மாமின்னுதான் கூப்பிடணுமாம். அசடு இல்லேப்பா?"

"அவன் யாரைச் சொல்கிறான், அம்மா!" என்று அம்மாளைக் கேட்டான் மூர்த்தி.

"அதுதான் நிர்மலாவாமே!"

காமாக்ஷி அம்மாளால் அதற்கு மேலும் மறைக்க முடியவில்லை. "அந்தப் பெண் இல்லாவிட்டால் இந்த ஐயாவும் நமக்கு இல்லை. அவளைத் தான் 'சாந்தம்மா' என்று கூப்பிட்டுக் கொண்டிருக்கிறான் குழந்தை!" என்று நிர்மலா செய்ததை யெல்லாம் அவள் விவரமாகக் கூறினாள்.

மூர்த்தி திக்பிரமை அடைந்து விட்டான்.

அன்று ஆஸ்பத்திரிக்குச் சென்றதும் நிர்மலாவைக் காண விரும்புவதாய்ச் சொல்லி அனுப்பினான். படபட வென்று அடித்துக் கொள்ளும் மார்புடன் வந்தாள் நிர்மலா.

யாதொரு பீடிகையுமின்றி, "நீ செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!" என்றான் மூர்த்தி. அவன் கண்களில் நீர் ததும்பிற்று.

"எதற்கு?" என்று நிதானமாய்க் கேட்டாள் நிர்மலா.

"என் பெண்ணுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்ததற்கு!"

"எல்லாம் ஈசன் செயல்!"

"நான் என்ன செய்தேன் உனக்கு? வேலை கற்றுக் கொடுக்க மறுத்தேன். ஏன், மரியாதையாய்க்கூடப் பேசியது கிடையாது. நீ என் எனக்காக இவ்வளவு சிரமப்பட்டாய்?" என்று உணர்ச்சி மிகுதியால் மூர்த்தி படபட வென்று பேசினான்.

"எதற்காக என்று கேட்கிறீர்கள்? உங்களுக்குத் தெரியாதா?" என்று மடை திறந்தாற்போல் கண்ணீர் உகுத்து, விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள் நிர்மலா.

மூர்த்தி அவளைப் பார்த்தான். சற்று நேரம் அப்படியே செயலற்று நின்றுவிட்டான். பிறகு, "நாளையிலிருந்து என்னிடம் வேலை கற்றுக்கொள்ள வருகிறாயா?" என்று கேட்டான்.

நிர்மலா பேசத் தெரியாமல் தவித்தாள். ஆனால், அவளுடைய முகபாவத்திலிருந்தே அவள் சம்மதத்தைத் தெரிந்து கொண்டான் மூர்த்தி.

நிர்மலா மூர்த்தியிடம் வேலை பயில வந்து சேர்ந்தாள். லீலாதேவிக்கும் ஞானமணிக்கும் அளவிலா சந்தோஷம். வேலை பயிலும் போது அவள் காட்டிய நுண்ணிய புத்தியும், அவளது கனிவான பேச்சும், களங்கமற்ற உள்ளமும் லீலா சொன்னதெல்லாம் மெய்யென்று உணர்த்தியது மூர்த்திக்கு.

* * *

ஒரு நாள் நிர்மலா காமாக்ஷி அம்மாளைப் பார்க்க உள்ளே சென்றாள். திரும்பும் தறுவாயில், "சாந்தம்மா!" என்று ஐயா அதிகாரத்துடன் அவளைக் கூப்பிட்டாள்.

"என்ன ஐயா?"

"நீ இங்கேயே இரேன்."

"அவள் அவாத்துக்குப் போக வேண்டாமா?" என்றான் அப்போது அங்கே வந்த மூர்த்தி.

அதற்குள் நிர்மலாவும், "நீ உன் அப்பா கிட்டே இருக்கயே, நான் என் அப்பா கிட்டே போக வேண்டாமா?" என்றாள்.

"ஏன் நீயும் என் அப்பாகிட்டேயே இரேன்!"

வெட்கத்தினால் நிர்மலாவின் முகம் சிவந்து விட்டது. தலை கவிழ்ந்து கொண்டாள்.



"ஆமாம், என் கேள்வியை அவள் கேட்டு விட்டாள். உன் பதில் என்ன?" என்று கேட்டான் மூர்த்தி.

"குரலில்தான் என்ன கனிவு!" என்று நினைத்துக் கொண்டே அவனை நிமிர்ந்து நோக்கினாள் நிர்மலா.

ஜயா அவளுக்கு ஜயத்தை அளித்து விட்டாள்.

நிர்மலாவின் முகம் சந்தோஷத்தினால் தாமரை மலரைப்போல் மலர்ந்தது. அவன் முகத்தில் அவன் கேள்விக்குப் பதில் பிரதி பலித்தது.

"அம்மா, அம்மா!" என்று கத்தினான் மூர்த்தி.

"என்டா?"

"நிர்மலாவுக்கு வேறு வேலை ஆகி விட்டது!"

பாட்டியின் முகம் வாடி விட்டது.

"எங்கே? இந்த ஊரில்தானே?"

"ஆமாம்."

"எங்கேயோ?"

"இங்கேயேதான்; உனக்கு நாட்டுப் பெண்ணாக!"

காமாக்ஷி அம்மாளின் உள்ளம் பூரித்தது. ஓடோடியும் அங்கே வந்தாள். நிர்மலா அவளை நமஸ்கரித்தாள். "தீர்க்க சுமங்கலி யாய் இரு!" என்று மனமார வாழ்த்தினாள் மாமியார்.

* * *

இப்போது "டாக்டர் மூர்த்தி" என்னும் போர்டுக்கு அடியில், "டாக்டர் மிஸஸ் நிர்மலா" என்று இன்னொரு போர்டு தொங்குகிறது.

அன்று இருவரும் காரில் ஒரு கேஸுக் குச் சென்று கொண்டிருந்தார்கள்.

"உங்களைப் பற்றி ஒரு ஸஹஸ்ரநாமம் எழுதி விடலாம் போலிருக்கிறதே!" என்றாள் நிர்மலா.

மூர்த்தி புன்சிரிப்புடன், "என்ன, புதிர் போடுகிறாயே!" என்றான்.

நிர்மலா அவனுடைய பெயர்களை யெல்லாம் சொன்னாள். எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு, "சரி தான், உங்கள் அப்பா எனக்கு என்ன பெயர் வைத்தார்?" என்று கேட்டான் மூர்த்தி.

நிர்மலா சற்றுத் தயங்கினாள். அவள் முகம் வெட்கிச் சிவந்தது. "சொல்லேன், பார்ப்போம்!" என்று தூண்டினான் மூர்த்தி.

"அசம்பாவ மூர்த்தி!"

மூர்த்தி 'ஓ'வென்று சிரித்து விட்டான். "அப்புறம் நீ என்ன பெயர் வைத்திருக் கிறாய்?" என்று ஆவலுடன் கேட்டான்.

"சாந்தமூர்த்தி!"

"நான் அதற்குத் தகுதியுள்ளவனா என்று பார்க்காமலா பெயர் வைப்பது?"

"என்னுடைய அனுபவத்தில் நீங்கள் எப்பொழுதும் சாந்தமாகவே இருக் கிறீர்கள். அதுவுமல்லாமல்....."

"அதுவுமல்லாமல்......?"

"நீங்கள் சாந்தாவின் மூர்த்தி—என் மூர்த்தி ஒரு நாளும் ஆகமாட்டீர்கள். ஆனால் நான் அவள் ஸ்தானத்தை அப கரிக்க விரும்பவில்லை. உங்களிடம் இருப்ப தையே ஒரு பாக்கியமாக நினைக்கிறேன்."

"என் வரையில் அன்று டென்னிஸ் கோர்ட்டிலேயே சாந்தாவை மறுபடியும் கண்டேன். என் கர்வத்தின் காரணமாக அதைத் தெரிந்து கொள்ளவில்லை. அதற்கு ஜயாவின் உதவி வேண்டியிருந்தது."

நிர்மலாவின் மனதில் ஒரு நிரந்தர சாந்தம் குடி கொண்டது. கண்களில் ஆனந்த பாஷ்பம் பிரகாசித்தது.

ஒரு பங்களாவுக் கெதிரில் மூர்த்தி காரை நிறுத்தினான். முன் வராந்தாவில் ஒரு சாய்வு நாற்காலியில் ஒரு வாலிபன் உட் கார்ந்து கொண்டிருந்தான். அவன் இவர் களைப் பார்த்துவிட்டு, "முருகா, முருகா!" என்று உரக்க அழைத்தான். முருகன் வரவில்லை; யுவன் எழுந்தான். கதவைத் திறக்கத்தான் வருகிறான் என்று நினைத் தாள் நிர்மலா. அவன் அவ்வாறு செய்ய வில்லை. உள்ளே சென்று மறுபடியும் கத்தி னான். முருகன் வந்தான். கதவைத் திறந்தான்.

"என்ன கர்வம், பணம் படுத்துகிற பாடு! தானே திறந்தால் குறைந்து போய் விடு வானே?" என்றாள் நிர்மலா.

"உம்......" என்றான் மூர்த்தி. ஆனால் ஒன்றும் மேலே கூறவில்லை. அவன் முகத் தில் ஒரு குறும்பு நகை தாண்டவமாடிற்று.

நிர்மலாவின் கண் முன்னும் வேறொரு காட்சி தோன்றி மறைந்தது. அவள் 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

# காலக்ஷேபம்

## கவலை வேண்டாம்!

புருஷன்:—இன்றைக்குச் சினிமாவுக்குப் போகலாம் என்று தீர்மானம் பண்ணி அதற்குத் தகுந்தபடி ஜோராக அலங்காரம் பண்ணிக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே! எனக்கு உடம்பு சரியாயில்லை. ஜுரம் வரும்போலிருக்கிறது. தலைவலி மண்டையைப் பிளக்கிறது! என்னால் நகரவே முடியாதுபோலிருக்கிறதே!

நாகரிக மனைவி:—அப்படியா? சரிதான்! நீங்கள் பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள்! நான் டாக்டரை வரச் சொல்லிவிட்டு, அப்படியே சினிமாவுக்கும் போய்விட்டு வருகிறேன்.

## யாருக்குப் பயம்?

ஒரு சர்க்கஸ் கம்பெனி ஒரு மைதானத்தில் வந்து இறங்கியிருந்தது. அந்தச் சர்க்கஸ் மிருகங்களைப் பார்ப்பதற்காகக் காட்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் நிறையப் பையன்கள் வந்திருந்தனர்.

சர்க்கஸ் மானேஜர் . (ஒரு பையனைப் பார்த்து) அடே, பையா! அந்தக் கூண்டினிடம் போகாதே! அதில் சிங்கம் இருக்கிறது!

பையன்:—பயப்படாதீர்கள், ஸார்! நான் உங்கள் சிங்கத்தை ஒன்றும் செய்துவிட மாட்டேன்!

## பழைய பாக்கி!

கடைக்காரன்:—என்னங்க, பழைய பாக்கி அப்படியே இருக்கிறதே! தருவதாக உத்தேசம் உண்டா, இல்லையா?

மைனர்:—என்ன, பழைய பாக்கியா?

கடைக்காரர்:—ஆமாங்க. இரண்டு மாசத்துக்கு முந்தி பாக்குப் பொட்டலம் ஒன்று வாங்கினீங்களே! அந்தக் காசை இன்னும் கொடுக்கலீங்களே!

## ரொம்ப சரி!

ஒருவர் (ஹோட்டல் முதலாளியிடம்):—இந்தக் காலத்தில் அரிசிச் சாப்பாட்டைக் கூட அனுபவித்துத்தான் சாப்பிட வேண்டியிருக்கிறது!

மற்றொருவர்:—அனுபவித்துச் சாப்பிடுகிறதோடு மட்டுமா? சாப்பிட்ட பின்பும் கூட அனுபவிக்க வேண்டியிருக்கிறதே!

## நடிப்புத்தானா!

"நேற்றைக்கு நாடகத்திலே கதாநாயகன் கதாநாயகியைக் காதலித்தானே, அது ரொம்பப் பிரமாதமாயிருந்தது!"

"ஆட்சேபம் என்ன? உமக்கு விஷயம் தெரியுமோ? அவர்கள் இரண்டு பேருமே தம்பதிகள்தான்! கல்யாணம் ஆகிப் பதினைந்து வருஷம் ஆகிறதாம்!"

"அப்படியா? ஆகா, என்ன நடிப்பு! என்ன நடிப்பு!"

## சரிதானே?

"பிச்சை கேட்க ஆபீஸ்தானா இடம்? உன்னை யார் இங்கே வரச் சொன்னது?"

"வீட்டிலே யிருக்கிறவங்கதானுங்க. எந்த வீட்டிலே போய்க் கேட்டாலும் 'ஐயா ஆபீஸுக்குப் போயிட்டாரு' என்று சொல்றாங்க. அதனாலேதான் இங்கே வந்தேனுங்க!"


## நல்ல யோசனை!

நிலம் வாங்கினவர்:—எங்க பாட்டியின் சொத்து ரூபாய் எண்ணாயிரம் என் பேருக்கு வந்தது. அதிலிருந்துதான் மூவாயிரம் ரூபாய்க்கு இந்த நிலத்தை வாங்கிப் போட்டேன்! தேவலீங்களா?



[illegible]:—பாக்கிப் பணத்தை என்ன செய்யப் போகிறீர்?

நிலம் வாங்கினவர்:—நிலத்துக்கு வரி கிஸ்தி இதுகள் கொடுக்க வைத்துக் கொண்டிருக்கிறேன்!




# கம்பர் தரும் காட்சி

• • •

## 187. அரசனைக் காட்டுவாயாக!

அநுமான் ராம லக்ஷ்மணர்களைப் பார்த்து ஒரே பக்தியில் மூழ்கி விட்டான்.

அநுமனுடைய பேச்சைக் கேட்ட மாத்திரத்தில் ராமனுடைய உள்ளம் என்ன ஆயிற்று; பார்க்கலாம்.

ராமனிடத்தில் ஏதோ சில வார்த்தைகள்தான் பேசினான் அநுமன். தன்னுடைய தாய், அஞ்சனை என்றும், வந்தவர்களை விசாரித்து வரும்படியாக அரசன் கட்டளை யிட்டான் என்றும் சொன்னான். சொன்னது அவ்வளவுதான். ஆனாலும் அந்த வார்த்தைக்குள் அவனுடைய உயர்ந்த பண்பாடெல்லாம் தெள்ளத் தெளியக் கிடந்தது. ராமன் பார்த்தான். அவ்வளவையும் நன்றாக அறிந்து கொண்டான்:

சிலருக்கு உடம்பு (ஆற்றல்) திடகாத்திரமா யிருக்கும். ஆனால் மனசு திடமாய் இருக்காது. வேறு சிலரைப் பார்க்கும்போது எத்தனையோ விஷயங்களைக் (கல்வி அமைதி) கற்று முடிவு கட்டி யிருப்பார்கள். ஆனால் இயற்கை அறிவு குன்றியே இருக்கும். இதற்கு மாறாக இருப்பவர்களும் உண்டு. ஒன்று இருந்தால் மற்றையது இராது. அதுதான் சாமான்ய மக்களிடத்தில் காண்பது.

அநுமனைப் பார்த்து ராமன் என்ன என்னுகிறான்:

மாற்றம்அஃ(து) உரைத்தலோ டும்
வரிசிலைக் குரிசில்மைந் தன்
தேற்றம்உற்(று) இவனின்னங் குச்
செவ்வியோர் இல்லைதே றி,—
ஆற்றலும் நிறைவுங், கல் வி
அமைதியும் அறிவும், என் னும்
வேற்றுமை இவனோடில் லை,
ஆம்! என விளம்பலுற் றான்.

[மாற்றம் அஃது உரைத்தலோடும்: அநுமன் மேலே சொன்னவாறு பேசியதும்; வரிசிலைக் குரிசில் மைந்தன்: வில்லேந்திய வீரனான ராமன்; தேற்றம் உற்று: அநுமனது குணங்களை நன்றாய் அறிந்து கொண்டு; இவனின் அங்கு செவ்வியோர் இன்மை தேறி: இவனை விடச் சிறந்த புருஷன் உலகத்தில் இல்லை என்பதை நன்கு உணர்ந்து. (தனக்குள்ளே எண்ணிக் கொள்ளுகிறான்) ஆற்றலும் நிறைவும்: தேக திடமும் மனோ திடமும்; கல்வி அமைதியும் அறிவும்: கல்வியினால் ஏற்பட்ட உறுதியும் இயற்கை அறிவும்; என்னும் வேற்றுமை இவனோடு இல்லை ஆம்: இப்படிக் குணங்கள் பிரிந்து நிற்கும் காரியம் இவனிடத்திலில்லை. இது உறுதிதான்; என விளம்பலுற்றான்: இப்படி என்னவனாய தம்பி லக்ஷ்மணனைப் பார்த்துப் பேசுகிறான்.]

இந்த அநுமனது அறிவு அற்புதமான சக்திகளையும் பண்புகளையும் பார்க்கும்போது அளவிட முடியாதன வாகவே இருக்கின்றன. எங்கும் காணாத மிக உயர்ந்த பண்பாடு இவனிடம் காணக் கிடக்கிறது. உலகமெலாம் இவனை இனிமேல்தான் அறியப் போகிறது. ஜனசமுதாயம் இப்போது உள்ள உலகத்தை விட்டு வேறொரு உலகத்துக்குப் போய்க் குடியேறினபோதிலும் அந்த உலகத்தார் இவனது புகழைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பிறவியிலே வந்த, இவனது அறிவு நுட்பமெல்லாம் அளவிடற்கரியது. கற்றுத் தேர்ந்த விஷயங்களும் கடல்போல் விரிந்து கிடக்கின்றன. இப்படி விரிந்த கலையும்

பண்பாடும் நம் கண்முன் தெளிவாய்த் தெரிகின்றன. எல்லாம் ஏதோ சில வார்த்தைகள் சொன்னதன் மூலமாகத் தெரிகின்றன. "இந்தச் சொல்வல்லான் யாரோ தெரியவில்லையே!" என்று ஒரே யடியாய் தன் உள்ளத்தில் உண்டான அதிசயத்தைக் கொட்டுகிறான் தம்பியினிடம்.

இல்லாத உலகத்தெங் கும்
  இங்கிவன் இசைகள்கூ ர,
கல்லாத கலையும்வே தக்
  கடலுமே என்னுங்காட் சி
சொல்லாலே தோன்றிற்(று)அன் றே
  யார்கொல்இச் சொல்லின்செல் வன்
வில்லார்தோள் இளைய வீர
  விரிஞ்சனோ விடைவல்லா னோ!

[இல்லாத உலகத்து எங்கும்: இப்போது இல்லாமல், இனிமேல் உண்டாகக் கூடிய உலகத்தெங்கும்: இங்கிவன் இசைகள் கூர: இதோ இருக்கிற அநுமனது புகழ் நிறையும் படியாக உள்ள; கல்லாத கலையும்; பிறவியோடு வந்த உணர்ச்சி வளரும்; வேதக் கடலுமே: நூல்களைக் கற்று வந்த ஞானக் கடலுமே; என்னும் காட்சி: என்று சொல்லக் கூடியதான விளக்கமெல்லாம்; சொல்லாலே தோன்றிற்று அன்றே: இப்போது இவர் பேசிய சொல்லின் மூலமாகவே தெளிவாகின; யார் கொல் இச்சொல்லின் செல்வன்: இந்தச் சொல்வல்லானை யார் என்று சொல்லுவது; வில்லார் தோள் இளைய வீர: வில்லேந்திய தோள்கொண்ட தம்பியே; விரிஞ்சனோ: சகல தத்துவங்களுக்கும் இருப்பிடமான கர்த்தாவாகவுள்ள பிரமன்தானோ! அல்லது இறைவனாகிய சிவபெருமான் தானோ!]

குறிப்பு:—அற்புத ரஸம் இங்கு வாய் விட்டுப் பேசுகிறது. அந்த ரஸத்தின் தனியான தொனி "இல்லாத" "கல்லாத" "சொல்லாலே" என்ற முழக்கங்களோடு வந்து விழுகிறது!

அதிசயத்தில் மூழ்கியவனாய் ராமன் அநுமன் முன்னிலையிலேயே ஒரே ஆவேசத்தோடு பேசி விடுகிறான். மனசு தன் வசம் ஆகவும், கவிக் குலத்து அரசனான சுக்ரீவனைப்பற்றி அநுமனிடம் விசாரிக்கிறான்.

'எவ்வழி இருந்தான்சொன் ன
  கவிக்குலத்(து) அரசன்:யாங் கன்
அவ்வழி அவனைக்கா ணும்
  அருத்தியால் அணுகவந் தேம்;
இவ்வழி நின்னையுற் ற
  எமக்குநின் இன்சொல்அன் ன
செவ்வழி உள்ளத்தா னைக்
  காட்டுதி தெரிய'என் றான்.

[எவ்வழி இருந்தான் சொன்ன கவிக் குலத்து அரசன்: நீ சொன்ன உங்கள் குலத்து அரசன் எங்கே இருக்கிறான்: அவ்வழி அவனைக் காணும் அருத்தியால்: அங்கே போய் அவனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால்; அணுக வந்தேம்: நட்புக் கொண்டு வந்தோம்; இவ்வழி நின்னை யுற்ற எமக்கு: இங்கே உன்னைச் சந்திக்கக் கிடைத்த எங்களுக்கு; நின் இன் சொல் அன்ன செவ்வழி உள்ளத்தானை: உனது சொல்லைப் போலவே அரசனது உள்ளமும் சிறந்த பண்பு வாய்ந்ததாய்த் தான் இருக்க வேண்டும்.]

ராம லக்ஷ்மணர்கள் அரச குமாரர்கள். இப்போது அவர்களது நிலைமை பரிதாபமான நிலைமை. இந்த நிலைமையைப் பூரணமாய் உணரக் கூடியவர்கள் அரசர்கள் தானே. ஆகவே ராமலக்ஷ்மணர்கள் சுக்ரீவனைப் பார்க்க ஆத்திரப் படுகிறார்கள்.



# அரசனும் தோட்டக்காரனும்

ராஜி

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பல மந்திரிகள் உண்டு. அரசன் மிகவும் நல்லவன் தான். ஆனால் எப்பொழுதும் அரண்மனையை விட்டு வெளியே போகாமல் அரண்மனையிலுள்ளவர்களை ஏதாவது குற்றங்கள் சொல்லிக் கொண்டிருப்பான். அதனால் அரண்மனையிலுள்ள மந்திரிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் அரசன்மீது ஒரு வெறுப்பு உண்டாயிற்று.

அரசனுக்குத் திடீரென்று சில காலமாகத் தான் சாப்பிடும் ஆகாரத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது. அரண்மனைப் பரிசாரகர்கள் தினந்தோறும் அரசனுக்குப் பிரியமான பண்டங்களை உயர்ந்த முறையில் தயார் செய்து கொடுத்தார்கள். அந்தப் பண்டங்களின் மீதும் அரசன் வெறுப்புக் கொண்டான். அரசன் மனைவி தானாகவே சமைத்து அளித்தாள். அப்படியும் அரசனுக்குப் பிடிக்க வில்லை. ஆகாரம்தான் சாப்பிடப் பிடிக்க வில்லை என்றால் குடிக்கும் தண்ணீரின் மீதும் அரசனுக்கு வெறுப்பு உண்டாயிற்று. அரண்மனையிலுள்ள மந்திரிகளும் சிப்பந்திகளும் தண்ணீருக்குப் பதிலாக உயர்ந்த தித்திப்பு பானங்கள் தயார் செய்து கொடுத்தார்கள். "இது நன்றாக இல்லை. இது புளிப்பு, என் வாய்க்கு எதுவும் ருசியாக இல்லை" என்று சொல்லியபடியே அரசன் எல்லா பானத்தையும் குடிக்காமல் திருப்பி விட்டான். அதனால், அரசனுடைய உடம்பு நாளுக்குநாள் மெலிந்தது. அரசனுக்கு உடம்பு இளைத்து வரவே அரண்மனையில் ஒரே பரபரப்பு ஏற்பட்டது.

பிரபல வைத்தியர்கள் எல்லாரும் வந்து அரசனுடைய உடம்பைப் பரிசோதித்தார்கள். "அரசனுக்கு உடம்பு ஒன்றுமில்லை" என்று வைத்தியர்கள் சொன்னார்களே தவிர, அரசன் ஆகாரத்தின் மீதும் குடிக்கும் தண்ணீர் மீதும் வெறுப்புக் கொண்டதின் காரணம் தெரியாமல் விழித்தார்கள்.

ஒருநாள் அரண்மனைத் தோட்டக்காரன் அரசன்முன் வந்து நின்றான். தோட்டக்காரனுக்கு அரசன் மீது மிகவும் அன்பு உண்டு. தோட்டக்காரன் சற்று வயது முதிர்ந்தவன். நல்ல உலக அனுபவம் பெற்றவன். அரசனிடம் அவன் நெருங்கி "அரசே, உங்களுடைய பழக்க வழக்கங்களை நான் நன்கு அறிவேன். உங்களை இப்பொழுது பிடித்திருக்கும் வியாதியையும் நான் நன்கு அறிவேன். உங்களைக் குணப்படுத்தும் மருந்து எனக்குத் தெரியும். இங்கிருந்து சற்று தூரத்துக் கப்பால் ஓர் இடம் இருக்கிறது. அது மிகவும் மந்திர சக்தி உள்ள இடம். உங்கள் ஆகாரத்தை அங்கு கொண்டு போய்ச் சாப்பிட்டீர்களானால் உங்கள் உடம்பு சீக்கிரத்தில் குணப்படும்" என்றான்.

அதைக் கேட்ட அரசன் சந்தோஷமடைந்தான். "அப்படியா! என்னை அந்த இடத்திற்கு அழைத்துப் போவாயா?" என்று ஆவலுடன் கேட்டான். தோட்டக்காரன் "நாளைக் காலை உம்மை அங்கு அழைத்துப் போகிறேன். ஆனால் ஒன்று. அந்த இடத்தை நீங்கள் ஒருவருக்கும் காண்பிக்காமல் ரகசியமாக வைத்து

கொள்ள வேண்டும். அந்த இடம் மலை அடிவாரத்தில் இருப்பதால் நீங்கள் வண்டியில் வர முடியாது. என்னுடன் கூட நடந்து வந்தீர்களானால் அந்த இடத்தை நான் காண்பிக்கிறேன். நீங்கள் சாப்பிடும் ஆகாரத்தை நீங்களே எடுத்துக் கொண்டு வரவேண்டும்'' என்றான்.

மறுநாட் காலையில் கையில் ஆகார மூட்டையுடன் அரசன் தோட்டக்காரனைப் பின் தொடர்ந்தான். சற்று தூரம் சென்றவுடன் ஓர் சிறிய மலையடிவாரத்தை அடைந்தார்கள். அங்கு நல்ல நிழலாக இருந்தது. அங்கிருந்த சிறிய மலையிலிருந்து ஓர் அருவி பெருகிக் கீழே விழுந்து கொண்டிருந்தது.

அரசன் அருவி ஜலத்தை ஒருவாய் குடித்தான். ''ஆகா இவ்வளவு இனிப்பான தண்ணீரை நான் குடித்ததே இல்லை!'' என்று சொல்லிவிட்டுத் தன் ஆகார மூட்டையை அவிழ்த்தான். ஆகாரத்தைச் சாப்பிட்டான். அந்த அருவியின் ஜலத்தினாலோ என்னவோ, அந்த ஆகாரமும் அரசன் வாய்க்கு எப்பொழுதும் போல் இல்லாமல் மிகவும் ருசியாக



இருந்தது. மந்திர சக்தி வாய்ந்த அந்த இடத்தைக் கண்டு பிடித்த தோட்டக்காரனை அரசன் வாழ்த்தினான்.

உடனே தோட்டக்காரன், ''அரசே, நீங்கள் இந்த இடத்தை மாத்திரம் ஒருவருக்கும் காண்பித்து விடாதீர்கள். இன்று நீங்கள் வந்தது போல தினந்தோறும் இரண்டு வேளையிலும் உங்கள் ஆகாரத்தை எடுத்துக் கொண்டு தனிமையாக வந்து சாப்பிட்டு விடுங்கள்'' என்றான். அரசனும் தோட்டக்காரன் சொல்லியபடி நடப்பதாக வாக்களித்தான்.

அப்படியே அரசன் ஒருவருக்கும் தெரியாமல் ஆகாரத்தை எடுத்துக் கொண்டு அந்த மலையடிவாரத்துக்கு வந்து சாப்பிட்டுவிட்டு அருவி ஜலத்தையும் குடித்துக்கொண்டு வந்தான். இம்மாதிரி இரண்டு மாதங்கள் கழிந்தன. அரசனுடைய உடம்பு நாளுக்கு நாள் பலப்பட்டு குணமாகி விட்டதை யறிந்த எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்.

ஒரு நாள் அரசன் தோட்டக்காரனை அழைத்து, ''இவ்வளவு நாள் நீ காண்பித்த மந்திரசக்தி வாய்ந்த இடத்தையும் அருவியையும் ரகசியமாக வைத்திருந்தேன். அந்த இடத்தையும் அருவியையும் பார்க்க வேண்டும் என்று என் மனைவி ஆசைப்படுகிறாள். அவளுக்கு மட்டும் காண்பிக்கட்டுமா?'' என்று கேட்டான்.

''அரசே! என்னை மன்னிக்க வேண்டும். நான் காண்பித்த இடமும் அருவி ஜலமும் மந்திர சக்தி வாய்ந்தவை அல்ல. அதை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். நான் ஒருவரும் பார்க்கக் கூடாது என்று சொன்னதினால் தான் தாங்கள் தினந்தோறும் கால் நடையாக அந்த இடத்திற்குப் போய் வந்தீர்கள். நீங்கள் இது வரையிலும் ஒரு தேகப் பயிற்சியும் இல்லாமல் எப்பொழுதும் அரண்மனையிலேயே இருந்ததினால் உங்களுக்கு ஒரு ஆகாரமும் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்'' என்று தோட்டக்காரன் சொல்லவே அரசன் அனுபவம் மிகுந்த தோட்டக்காரனை மெச்சி அவனுக்கு நிறைய வெகுமானங்கள் கொடுத்தான்.



# சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

இடையில் அந்தப் பாழும் மனிதன் அவனிடம் வந்தே விட்டான். "ஸார், உங்கள் டிக்கெட்?" என்று டிக்கெட் பரிசோதகர் கேட்டதும் ரமாநாத்துக்கு ஒரே யடியாகத் தூக்கி வாரிப் போட்டது.

ரமாநாத் தன்னை ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு, "என் டிக்கெட் ஒரு போர்ட்டர் கையில் மாட்டிக் கொண்டு விட்டது. டிக்கெட் வாங்குவதற்காக அவனிடம் பணத்தைக் கொடுத்தேன். போனவன் திரும்பி வரவில்லை ஸார்!" என்றான்.

டிக்கெட் பரிசோதகருக்கு அவனுடைய வார்த்தையில் நம்பிக்கை விழவில்லை. "எனக்கு அதெல்லாம் தெரியாது, ஸார்! நீங்கள் அடுத்த ஸ்டேஷனில் இறங்கி விட வேண்டும். ஆமாம், நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நானா? கல்கத்தாவுக்குப் போகிறேன்" என்று பதில் அளித்தான் ரமாநாத்.

"அப்படியானால் அடுத்த ஸ்டேஷனில் இறங்கி டிக்கெட் வாங்கிக் கொள்ளுங்கள்."

"அதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது, ஸார். என்னிடம் இருபத்தைந்து ரூபாய் தான் இருந்தது. டிக்கெட் கொடுக்கும் ஜன்னலில் ஒரே கும்பலாயிருந்தது. அதனால் ரெயில்வே போர்ட்டர் ஒருவனிடம் பணத்தைக் கொடுத்து டிக்கெட் வாங்கி வரச் சொன்னேன். வெகு நேரமாகியும் போன ஆள் திரும்பி வரவேயில்லை. உங்களுக்கே ஒருவேளை அவனைத் தெரிந்திருக்கலாம். அவன் உயரமாக அம்மைத் தழும்புடன் இருப்பான், ஸார்."

"அதைப்பற்றி நீங்கள் என்னிடம் சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. ரெயில்வே அதிகாரிகளுக்கு எழுதுங்கள். டிக்கெட் இல்லாமல் நீங்கள் மேலே பிரயாணம் செய்யக்கூடாது" என்று டிக்கெட் பரிசோதகர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

ரமாநாத் மிகவும் வணக்கத்துடன், "ஸார், உங்களிடம் ஒளிப்பானேன்? என்னிடத்தில் வேறு பணமே கிடையாது. உங்களுக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ, அப்படிச் செய்யுங்கள். அவ்வளவு தான் நான் சொல்லலாம்" என்றான்.

"நான் என்ன செய்யட்டும், ஸார். சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லையே!" என்று கையை விரித்தார் டிக்கெட் பரிசோதகர்.

அந்த வண்டிக்குள்ளிருந்த பிரயாணிகள் அனைவரும் அவனைப்பற்றி ஒருவருக்கொருவர் காதைக் கடித்துக் கொள்ளலாயினர். அதுவோ மூன்றாவது வகுப்பு வண்டி. அதில் உட்கார்ந்திருந்தவர்கள் பெரும்பாலும் கூலியாட்கள். அவர்களுக்கு ஒரு நாகரிக வாலிபன் இப்படி அவமானப் படுவதைக் காணும்பொழுது, உள்ளூற ஒரு தனி ஆனந்தம் பொங்கி யெழுந்தது. டிக்கெட் பரிசோதகர், 'சீ, நாயே! போ, வெளியே!' என்று சொல்லி அவனைக் 'கல்தா' கொடுத்து வெளியே இறக்கி விட்டிருந்தால் இன்னும் அதிக ஆனந்தப் பட்டிருப்பார்கள். ரமாநாத்துக்குத் தன் வாழ்க்கையில் இப்படி நாணிக் குனிய வேண்டிய சந்தர்ப்பமே இதுகாறும் ஏற்பட்டதில்லை. அவன் பேசாமல் தலையைக்

குனிந்துகொண்டு நின்றான். இப்பொழுது தானே வாழ்க்கையில் அவனுக்குப் புதிய யாத்திரை தொடங்கியிருக்கிறது. இன்னும் போகப் போக எத்தனை இன்னல்களையும் கஷ்டங்களையும் அவன் அனுபவிக்க வேண்டி வருமோ? யார் யார் கையில் மாட்டிக்கொண்டு அவன் ஏமாற வேண்டியிருக்குமோ? யார் கண்டது? 'இப்படி அவமானப் படுவதைக் காட்டிலும், ஓடும் வண்டியி லிருந்து குதித்து உயிரை விட்டு விட்டால் என்ன?' என்றுகூட அவனுக்குத் தோன்றியது. அவனுடைய கண்களில் நீர் சுரந்தது. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காகத் தலையை ஜன்னல் வழியே நீட்டி அவன் கண்ணீர் உகுத்தான்.

அவன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த ஒரு கிழவன், அவனைப் பார்த்து "கல்கத்தாவிலே எந்த இடத்துக்குப் போகிறீங்க, சாமி?" என்று கேட்டு வைத்தான்.

ரமாகாந்துக்கு அந்தப் பட்டிக் காட்டானும் சேர்ந்து கொண்டு தன்னை ஏளனம் செய்வது போலப் பட்டது. ஆகவே, "எங்கே போனால் உனக்கு என்ன?" என்று அவன்மீது சீறி விழுந்தான்.

கிழவன் அவனுடைய சீற்றத்தைக் கொஞ்சங் கூடப் பொருட் படுத்தவில்லை. "நானும் கல்கத்தாவுக்குத்தான் போகிறேன். 'நாமிருவரும் சேர்ந்து போகலாமே; பேச்சுத் துணையாக இருக்குமே' என்பதற்காகத்தான் கேட்கிறேனுங்க" என்று சொன்னான். பிறகு இன்னும் தன் குரலைச் சிறிது தாழ்த்திக் கொண்டு, "ரெயில் சார்ஜுக்குப் பணம் வேண்டுமானால் நான் தருகிறேன். நீங்கள் ஊர் போய்ச் சேர்ந்த பின் எனக்குக் கொடுங்கள், போதும்" என்றான்.

கிழவன் தன் சீற்றத்தைக்கூடப் பொருட் படுத்தாமல் அன்பொழுகப் பேசுவதைக் கண்ட ரமாகாந் திரும்பி அவனை உற்றுப் பார்த்தான். அவனோ அறுபது - எழுபது வயதுத்தொண்டு கிழம். தேகத்தில் சதைப் பற்றே யில்லை. எலும்புதான் துருத்திக் கொண்டு நின்றது. வழுக்கைத் தலை. மீசையைக்கூட அவன் எடுத்து விட்டான். ஒரு சின்னஞ் சிறு மூட்டையைத் தவிர அவனிடம் வேறு சாமானே கிடையாது.

ரமாகாந் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கண்டதும் அவன், "ஆமாம், நீங்கள் ஹௌராவில் இறங்கப் போகிறீர்களா, அல்லது வேறு எங்கேயாவது இறங்கப் போகிறீர்களா?" என்று கேட்டான்.

ரமாகாந் அவன் காட்டும் நன்றியைக் கண்டு மனமிளகி, "நான் அடுத்த ஸ்டேஷனிலேயே இறங்கி விடுவேன். பணத்துக்கு ஏதாவது ஏற்பாடு செய்து கொண்டுதான் திரும்பி வரப் போகிறேன்" என்றான்.

"உங்களுக்கு எத்தனை ரூபாய் வேண்டும். நானும் கல்கத்தாவுக்குத் தானே வருகிறேன். உங்களுக்குச் சௌகரியப்பட்ட பொழுது திருப்பிக் கொடுங்கள், போதும். என் ஐந்தாறு ரூபாயை எடுத்துக் கொண்டு நீங்கள் எங்கேயாவது ஓடிவிடப் போகிறீர்களா, அதற்கு? ஏன் சாமி, உங்கள் வீடு எங்கே யிருக்கிறது?" என்று கேட்டான் கிழவன்.

"இங்கே — பிரயாகையில்தான் இருக்கிறது."

கிழவன் பக்திப் பெருக்கில் திளைத்து "பிரயாகையில் இருக்கிறதா? இங்கே — பிரயாகையில் வாழக் கொடுத்து வைத்திருக்கும் நீங்கள் பெரிய புண்ணியசாலிகள்! நான்கூட இங்கே திரிவேணியில் ஸ்நானம் செய்வதற்காகத்தான் வந்திருந்தேன். உண்மையிலேயே இந்தப் பிரயாகை தேவதைகள் வாழும் பூமி தான், சாமி. ...ஆமாம், உங்களுக்கு எத்தனை ரூபாய் வேண்டும்?" என்று கேட்டான்.

ரமாகாந் மிகவும் சங்கோசத்துடன், "ஊர் போய்ச் சேர்ந்தவுடன் 'என் பணத்தைக் கொண்டு வா' என்று நீ கேட்டால் நான் பணத்துக்கு எங்கே போவேன்? மெதுவாகத்தான் தர முடியும். அதனால் தான் யோசிக்கிறேன்" என்றான்.

குழந்தைகளைப் போல் கபடமற்றதோர் புன்சிரிப்புடன் கிழவன், "சாமி, நீங்கள் கொடுக்கிற பொழுது கொடுங்கள் என்றுதான் நான் அப்பொழுதே சொல்லி விட்டேனே! என் ஐந்து ரூபாயை எடுத்துக் கிட்டு நீங்கள் மாடி வீடு கட்டிவிடப் போகிறீர்களா, என்ன? அது சரி, உங்கள் செலவுக்குப் பத்து ரூபாய் போதுங்களா?" என்று கேட்டவாறே பணத்தை எடுப்பதற்காக முடிச்சை அவிழ்க்கலானான்.

"அது எதேஷ்டம்!" என்று தலை குனிந்தவாறே ரமாகாந் பதில் சொன்னான்.

பிறகு கிழவனிட மிருந்து பணத்தை வாங்கி டிக்கெட் பரிசோதகருக்குக் கொடுத்தவாறே, 'இந்தக் கிழவன் இவ்

வளவு நேர்மையாகவும், கள்ளங் கபடு அற்றவனாகவும், பரோபகாரச் சிந்தனையுடையவனாகவும், சூதுவாது தெரியாதவனாகவும் இருக்கிறானே! நாகரிகத்தில் மூழ்கித் திளைத்தவர்கள் என்று நாம் சொல்லுகிறோமே! அவர்களில் எத்தனை பேர் இவனைப் போல முன்பின் அறியாத ஒருவனுக்குப் பணம் கொடுத்து உதவி செய்ய முன் வருவார்கள்? என்று நினைத்தான் ரமாநாத். வண்டியில் உள்ள மற்ற பிரயாணிகளும் கிழவனை மிகுந்த பக்தி சிரத்தையுடன் நோக்கினர்.

ரமாநாத் கிழவனுடைய பேச்சிலிருந்து, அவன் கல்கத்தாவில் காய்கறிக் கடை வைத்திருக்கிறான் என்றும், அவன் பீஹார் மாகாணத்தைச் சேர்ந்தவன் என்றும், நாற்பது வருஷங்களாக அவன் கல்கத்தாவில் வியாபாரம் செய்து வருகிறான் என்றும், அவனுடைய பெயர் தேவி தீன் என்றும், பத்ரிநாத் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று க்ஷேத்திராடனம் செய்துவிட்டுத் திரும்புகிறான் என்றும் தெரிந்து கொண்டான்.

ரமாநாத் அவனை ஏற இறங்கப் பார்த்து ஆச்சரியத்துடன், "நீ பத்ரிநாத்துக்குப் போய்விட்டு வருகிறாயா? அங்கே போவது என்றால் பெரிய பெரிய மலைகளையெல்லாம் தாண்டியாக வேண்டுமாமே! நீ எப்படித் தாண்டினாய்?" என்று கேட்டான்.

கடவுள் மனம் வைத்தால் எந்தக் காரியம் தான் நடக்காது? அவருடைய கருணை ஒன்றிருந்தால் போதாதா?" என்றான் கிழவன் தேவி தீன்.

"உன் குழந்தை குட்டிகள் எல்லாரும் கல்கத்தாவில்தானே இருக்கிறார்கள்?"

என் குழந்தை குட்டிகளா? எல்லாரும் பகவானுடைய வீட்டுக்குப் போய்விட்டார்கள்! மொத்தம் எனக்கு நாலு பிள்ளைகள்; இரண்டுபேருக்குக் கல்யாணம்கூட ஆகிவிட்டது. எல்லாருமே போய்விட்டார்கள்.



நான் ஒருவன்தான் இன்னும் பாக்கியிருக்கிறேன். வயலில் விதை விதைத்தவனே, பயிரை அறுப்பதுபோல, நான்...'' என்று சொல்லிய வண்ணம் தேவி தீன் ஒரு வரட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

சிறிது நேரம் கழித்து அவன் மறுபடியும், "இன்னும் கிழவி உயிருடன்தான் இருக்கிறாள். எங்கள் இரண்டு பேரிலும் முதலில் யார் போகப் போகிறோமோ, தெரியவில்லை. அவள் 'நான்தான் முதலில் போவேன்' என்கிறாள். நான், 'நான்தான்' என்கிறேன். யார் சொல் பலிக்கப்போகிறதோ? முடிந்தால் உனக்கு அவளையே காட்டுகிறேன். இன்னும் அவள் நகை அணிந்து கொள்ளுகிறாள். காதுகளில் ஓலை, கையில் காப்பு, மூக்கில் புல்லாக்கு எல்லாம் போட்டுக் கொண்டுதான் அவள் கடையில் வந்து உட்காருவாள். நாலு புண்ணிய ஸ்தலங்களைப் பார்த்து விட்டு வருவோமே என்று நான் அவளைக் கூப்பிட்டேன். அதற்கு அவள், 'புண்ணிய ஸ்தலமும் ஆயிற்று; கிண்ணிய ஸ்தலமும் ஆயிற்று! யார் கடையைப் பார்த்துக்கொள்ளுவார்கள்? நீ வேண்டுமானால் போய் விட்டு வா' என்று கறுக்காகப் பதில் சொல்லி விட்டாள். 'இன்றைக்குச் சாவோமோ, நாளைக்குச் சாவோமோ' என்று தெரியவில்லையாம்! அப்பொழுதும் அவள் அந்தக் கடையை விட மாட்டேன் என்கிறாள். நமக்குப் பின்னால் யார் ஆளப்போகிறார்கள்! எதற்காக நாம் இவ்வளவு பாடுபட வேண்டும் என்றெல்லாம் அவள் யோசிப்பதில்லை. அவளை இந்த ஆசை விட்டால் தானே! இப்பொழுதுகூட ஏதாவது நகைகள் செய்து போட்டுக் கொண்ட வண்ணமாகத்தான் இருக்கிறாள். அவளுக்கு எப்பொழுதுதான் இந்த நகையாசை ஒழியப் போகிறதோ, எனக்குப் புரியவே இல்லை. இது என் வீட்டில் மட்டும்தான் என்றில்லை. உலகத்திலே ஒரு வீடு விடாமல், எங்கே பார்த்தாலும், 'நகை, நகை!' என்று ஒரே நகைப் பேச்சாகவேதான் இருக்கிறது! இந்த நகைக்காக, வீட்டார்களைப் பட்டினி போட்டுச் சாக அடிக்கவோ, வீட்டில் உள்ள சாமான்களை விற்று விடவோ, எந்த வீட்டுப் பெண்களும் தயங்குவதில்லை. அம்மட்டோடாவது நின்றால் தேவலையே! இந்த நகைக்காகத் தம் மானத்தை முதற்கொண்டு விற்கத் தயாராகி விடுகிறார்கள். சின்னவர்கள் — பெரியவர்கள், ஏழைகள்—பணக்காரர்கள், எல்லாரையுமே இந்த வியாதி பிடித்து ஆட்டி வைக்கிறது!......ஆமாம், நீங்கள் கல்கத்தாவிலே எங்கே வேலை செய்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

"நான் கல்கத்தாவுக்கே புதிது. இனிமேல் போய்த்தான் ஏதாவது வேலை தேடிக் கொள்ள வேண்டும்.''

"அப்படியானால் என் வீட்டிலேயே தங்கிவிடுங்களேன். இரண்டு அறைகள் இருக்கின்றன. ஒன்றை உங்களுக்கு ஒழித்துத் தருகிறேன். வேலை கிடைத்த பின் நீங்கள் ஏதாவது வீடு பார்த்துக் கொண்டு போகலாம். நான் வீட்டை விட்டு ஹௌராவுக்கு ஓடி வந்து ஐம்பது வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. எத்தனையோ சுகங்களும் கண்டு விட்டேன், துக்கங்களும் கண்டு விட்டேன். இனிமேல் ஒன்றும் பாக்கியில்லை. இப்பொழுதெல்லாம், 'கடவுளே! என்னைச் சீக்கிரம் கொண்டு போய் விடு. கிழவிக்கு மட்டும் சாகாவரம் கொடுத்து விடு' என்று தினம் பொழுது விடிந்தால் வேண்டிக் கொள்ளுகிறேன். ஏன் தெரியுமா? அவள் செத்துப் போய் விட்டால், அப்புறம் அவளுடைய கடைகண்ணியைப் பார்த்துக் கொள்ளுவது யார்? அவளுடைய வீடு, நகைகள் எல்லாம் என்ன ஆவது? அவள் உயிருடன் இருந்து விட்டால், இந்தக் கவலைகளுக்கெல்லாம் இடம் ஏற்படாதல்லவா!'' என்று சொல்லி தேவி தீன் மறுபடியும் சிரித்தான்.

ரமாநாத்துக்கு அந்தக் கிழவன் இப்படிச் சிரித்துப் பேசிக் கொண்டு உற்சாகமாக இருப்பது மிகவும் ஆச்சரியத்தை விளைவித்தது. 'விஷயமில்லாத விஷயத்துக்கெல்லாம் இவன் இப்படிச் சிரிக்கிறானே! எந்த விஷயங்களை நினைத்தாலே மற்ற ஜனங்களுக்கெல்லாம் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்து விடுகிறதோ, அவைகளுக்கெல்லாம்கூட இவன் எப்படித்தான் சிரிக்கிறானோ?' என்று எண்ணினான் ரமாநாத். கவலையற்ற கட்டிளங் காளைகளான வாலிபர்கள்கூட இப்படிச் சிரித்து அவன் தன் கண்களால் கண்டதில்லை. அந்தக் கிழவன் ரமாநாத்திடம் வெகு நாட்களாகவே பழகியவன் போல, தன் வாழ்க்கை விருத்தாந்தங்கள் அனைத்தையும் சொல்லித் தீர்த்து விட்டான். ஆகவே ரமாநாத்துக்கும் தன்னைப்பற்றி ஒரு கதை கட்டிச் சொல்லும்படியாகி விட்டது.

• • •

ரமாநாத்தின் விருத்தாந்தங்களைக் கேட்டபின் தேவி தீன், "அப்படிச்

சொல்லு. வீட்டில் சண்டை போட்டுக் கொண்டுதான் நீயும் ஓடிவந்து விட்டாயா? உன் வீட்டுக்காரி, 'எனக்கு நகையே செய்து போடமாட்டேன் என்கிறாயே! உனக்கு வாழ்க்கைப்பட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்!' என்று சொல்லிச் சொல்லி உன் உயிரை வாங்கி விருப்பாள். இல்லா விட்டால் மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒத்துக் கொள்ளாமல் எப்பொழுது பார்த்தாலும் வீடு ரணகளப்பட்டிருக்கும்! அதைக் கேட்டுக் கேட்டு உன் மனம் புளித்துப் போயிருக்கும்! அப்படித்தானே?" என்று கேட்டான்.

"ஆமாம், அப்பா. அதேதான் விஷயம். உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான் ரமாநாத்.

தேவீ தீன் சிரித்துக் கொண்டே, "அதெல்லாம் பெரிய மந்திரமாக்கும். ஆமாம், இன்னும் உனக்குக் குழந்தை குட்டிகள் பிறந்திருக்காது." என்றான்.

"ஆமாம். இன்னும் பிறக்கவில்லை தான்."

"தம்பிகள் இருப்பார்கள்."

"இருக்கிறார்கள். இவ்வளவு சரியாக எப்படியப்பா சொல்லுகிறாய்?" என்று ரமாநாத் வியப்புடன் கேட்டான்.

"அதுதான் சொன்னேனே, எனக்கு மந்திரம் தெரியுமென்று! உன் மாமனார் வீடு பணக்கார வீடுதானே?" என்று சிரித்துக்கொண்டே தேவீ தீன் கேட்டான்.

"ஆமாம், அப்பா!"

"ஆனால் தன் பெண்ணுக்காக ஒரு தம்பிடிகூடச் செலவழிக்க அவர்களுக்கு மனமே வந்திராது. என்ன?"

"ஆமாம், அப்பா. அப்படியே இம்மி கூடப் பிசகாமல், உன்னால் எப்படிச் சொல்ல முடிகிறது? கல்யாணம் ஆன பிறகு அவர்கள் ஒரு தம்பிடிக்குக் கூடச் செய்ததில்லை. அதுமட்டும் இல்லை, 'தன் பெண்தானே' யென்று ஒரு நாளைக்குக் கூடத் தன் வீட்டுக்கு அழைத்துப் போய் வைத்துக் கொண்டதில்லை."

"எனக்கு எல்லாம் தெரியும். இதுதான் உலக வழக்கம். தன் குழந்தைக்குச் செய்யக்கூட இந்தப் பாழும் மக்களுக்கு மனம் வராது" என்றான் தேவீ தீன்.

மூன்று நாட்களாகவே ரமாநாத்துக்குச் சரியான தூக்கம் இல்லை. ஏனெனில் அவன் பகல் பூராவும் பணத்துக்காகச் சுற்றி அலைவதும், இரவுவேளைகளில் அந்தக் கவலையில் உழலுவதுமாகத் தன் பொழுதைப் போக்கி வந்தான். ஆகவே அசதியின் காரணமாக, அவன் பேசிக்கொண்டே தூங்கி வழியலானான். அதைப் பார்த்ததும் தேவீ தீன் தன் மூட்டையை அவிழ்த்து, ஒரு ஜமக்காளத்தை எடுத்துப் பலகையில் விரித்து, "நீ இதில் வந்து படுத்துக் கொள்ளு. நான் உன்னிடத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறேன்" என்றான்.

●

ரமாநாத் அதில் படுத்துக் கொண்டான். தேவீதீன் அடிக்கடி ஆசை ததும்பும் கண்களுடன் ரமாநாத்தையே உற்றுப் பார்க்கலானான். வெகு நாட்கள் தன்னைப் பிரிந்து அயல் நாடு சென்று தங்கிவிட்டுத் திரும்பி வந்த பிள்ளையைத் தகப்பன் எவ்வளவு ஆவலுடன் பார்ப்பானோ அதுபோல் இருந்தது, ரமாநாத்தைப் பார்த்த அந்தப் பார்வை.


## இருபத்திரண்டாம் அத்தியாயம்

## "அவர் எங்கே?"

ரமாநாத் 'விடு விடு' என்று கீழே இறங்கின பொழுது, 'அவன் வீட்டை விட்டு ஓடி விடுவான்' என்று எண்ணமே பத்மாவுக்கு எழவில்லை. அவன் அந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும்; 'என்னிடமே உங்கள் பித்தலாட்டங்களையெல்லாம் காட்ட ஆரம்பித்து விட்டீர்களே என்று கடிந்து கொள்ளுவோமா?' என்று எண்ணினாள். ஆனால் அடுத்த கணமே அந்த எண்ணம் மாறி விட்டது. ஏனெனில் அவளுடைய மனத்தில், 'ரத்தன் கொடுத்த பணத்தை எடுத்துக் கடைக்காரனுக்குக் கொடுத்துவிட்டு, அவளுடைய பணத்தைத் திருப்பிக் கொடுக்க வகை புரியாமல், சர்க்கார் பணத்தை ரமாநாத் கையாடி விருப்பானோ?' என்று சந்தேகம் உதித்தது. 'ஆமாம், இவர் என்னிடம் இப்படியெல்லாம் ஏன் ஒளித்து மறைத்து வைக்க வேண்டும்? தன்னைப்பற்றி வானளாவப் புகழ வேண்டிய அவசியம் என்ன? உலகத்தில் பணக்

காரன்—ஏழை இருவரும் உண்டு என்பதை நான் அறியாதவளா? 'பெண்கள் என்றால் நகைகள் செய்து போட்டுக் கொண்டுதான் ஆகவேண்டும்' என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? ஏதோ கையில் காசு மிச்சம் மீதி யிருந்தால் நகைகள் செய்து போட்டுக் கொள்ளுவது வழக்கம் தான். ஆனால் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, திருடி, ஏமாற்றி, மோசடி செய்து நகைகள் செய்து போட்டுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று இங்கே யாரும் ஆசைப்படவில்லையே! அப்படி யிருக்கும் பொழுது இவர் என்னை என் அவ்வளவு மட்டமாக நினைத்து விட்டார்?' என்ற எண்ணம் எழுந்ததும், அவளுக்கு ரமாகாந் மீது கோபம் கோபமாக வந்தது.

ரமாகாந் தன் அறையில் இருந்தால் அவனிடம் போய், 'உங்களுக்கு என்ன என்ன நகைகள் வேண்டும் என்று கேட்போமே!' என்று அவள் எண்ணினாள். ஆனால் அப்பொழுதிருந்த நெருக்கடியான நிலைமை நினைவுக்கு வந்ததும் அவளுடைய கோபம் எல்லாம் மாயமாய் மறைந்து விட்டது; பயம் கவ்விக் கொண்டது. அவள் வெகு வேகமாகக் கீழே இறங்கினாள். ரமாகாந் கீழே உட்கார்ந்து கொண்டு தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான் என்று எண்ணி அவனுடைய அறைக்குள் அவள் நுழைந்தாள். ஆனால் அவனை அங்கே காணோம். சைக்கிள் இருந்த இடத்திலேயே இருந்தது. உடனே வாசலில் எட்டிப் பார்த்தாள்.



"என்னங்க, இது அநியாயமாயிருக்கு! நீங்க கூட ஸ்பூனாலே சாப்பிட ஆரம்பிச்சிட்டீங்க. வர வர நாகரீகம் முத்திப்போயிருக்கு!"

"அதில்லீங்க. இப்பவெல்லாம் ஹோட்டல்லே கையாலே சாப்பிட்டா நமக்கு அடுத்த ஆட்டம் வர்றதுக்குள்ளே கையெல்லாம் காஞ்சிப் போயிடுது! அதனாலே தான் ஸ்பூனாலே சாப்பிடுறேன்.

தெருவிலும் அவனைக் காணோம். அதற்குள் எங்கே போயிருப்பான்? பையன்கள் இருவருமோ பள்ளிக்கூடம் போய்விட்டார்கள்; அவனை அழைத்து வர அவள் யாரை அனுப்புவாள், பாவம்! அவளுடைய மனத்தில் ஒரு இனம் தெரியாத வேதனை உண்டாயிற்று. உடனே அவள் ஓடி மேலே போனாள்; கழுத்திலிருந்த ஹாரத்தையும், கைக் கங்கணத்தையும் கழற்றி ஒரு கைக் குட்டையில் கட்டி எடுத்துக் கொண்டு, கீழே இறங்கித் தெருவுக்கு வந்தாள். உடனே ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு, 'சங்கம்' ஆபீசுக்குப் போகுமாறு வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டாள். 'இவ்வளவு நேரம் பேசாமல் இப்படி உட்கார்ந்திருந்து விட்டோமே! அப்பொழுதே நகைகளைக் கழற்றிக் கொடுக்காமல் போனது நம் மதியீனம்தானே!' என்று அவள் மனத்துள் வருத்தப்பட்டுக் கொண்டாள்.


வழியில் இருபுறமும் அவள் வெகு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே போனாள். அதற்குள்ளேயா அவன் இத்தனை தூரம் வந்திருப்பான்? இன்று நேரமாகி விட்டபடியால் ஒரு வேளை அவனும் வண்டி வைத்துக் கொண்டு ஆபீஸுக்குப் போயிருப்பானோ, என்னவோ! இல்லாவிட்டால் இந்த நேரத்துக்குள் அவள் அவனை எட்டுத் தடவை பார்த்திருக்க மாட்டாளா? எதிரே வந்து கொண்டிருந்த ஒரு வண்டிக்காரனைப் பார்த்து, "ஏன் அப்பா, இந்தப் பக்கமாக யாராவது ஒரு ஐயா வண்டியில் போனார்களா?" என்று அவள் கேட்டு வைத்தாள்.

"ஒரு ஐயா இப்பொழுதுதான் இந்தப் பக்கமாகப் போனாங்கோ, அம்மா!" என்றான் அந்த வண்டிக்காரன்.

'ரமாகாந் ஆபீஸ் போய்ச் சேருவதற்குள் தானும் அங்கே போய்ச் சேர்ந்து விடலாம் என்று பத்மாவுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. ஆகவே, அவள் வண்டிக்காரனிடம் அடிக்கடி குதிரையைத் தட்டிச் சற்று வேகமாக ஓட்டும்படி சொல்லலானாள். அவள் ஆபீஸை அடையும் பொழுது மணி பதினொன்று அடித்து விட்டது. ஆபீஸில் இங்கும் அங்கும் ஜனங்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். யாரைக் கேட்பாள், அவள்? அவன் எங்கே உட்கார்ந்திருக்கிறானோ?

அவள் இப்படி யோசனையில் ஆழ்ந்து நின்று கொண்டிருந்த பொழுது ஒரு பியூன் அவ்வழியே வந்தான். (தொடரும்)

# கரடுமுரடான ரஸ்தாக்களுக்கு




# டன்லப்
## ஜயண்டகள்

TRADE MARK

DK 304TM



நீங்கள் இன்று
மக்லின்ஸால் பல்
துலக்கினீர்களா?



நியதமான முறை
தானே அது!




ஆபீசுகளில் வேலை செய்யும் இக் காலத்திய இள நங்கைகள் ஜொர்த பெறுமதியைக் கண்டறிந்து கொள்ளக் கற்றிருக்கின்றனர். மக்லின்ஸின் அரிய சுத்திகரண, பூதிநாசக குணங்கள் காரணமாகவும், அதன் சிக்கனத்தைக் கண்டும் அவர்கள் அதையே தெரிந்தெடுக்கின்றனர். நீங்களும் அதை நியதமான முறையாகச் செய்து கொள்ளுங்கள். இன்றே ஒரு ட்யூப் வாங்கவும்.

எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்






'BISURATED' MAGNESIA
BISMAG




VITALTO
SKIN HEALTH


சிக்கல் மயமான உலகில்
உண்மை வாய்ந்தவை எளிதான விஷயங்களே
ஒரு சிறு வில்லை உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கமுடியும்
அது இயற்கைக்கு மாறாக அன்றி அதனுடன் ஒத்துவேலை செய்கிறது
ஆஸ்ப்ரோவால் இருதயத்துக்கு ஒரு கெடுதியுமில்லை
'ஆஸ்ப்ரோ'
வலியையும் ஜுரத்தையும் போக்கடிக்கிறது
ஆடவர், ஸ்திரீகள், குழந்தைகள் அனைவருக்கும் ஆஸ்ப்ரோ செய்யக்கூடியதென்ன
ASPRO
எங்கும் கிடைக்கும்




ஆடைகளை ஸன்லைட் சோப்பினால் சலவை செய்தபின் அவை முன் இருந்ததைவிட அதிக வெண்மையாகவும் பளிச்சென்றுமிருக்கின்றன. இச்சோப்பின் ஏராளமான நுரை நூலின் இழைகளினூடே புகுந்து, அடித்துத் துவைக்காமலே சிரமமின்றி—அழுக்குப் படிந்த இடங்களிலிருந்துங்கூட —மலினங்கள் பூராவையும் நீக்கிப் போக்குகிறது. உங்கள் ஆடைகளுக்கு ஸன்லைட் சோப் புதுமையைத் தருவதோடு உங்கள் கைகளுக்கு நன்மை பயக்கும்.


# ஸன்லைட் சோப்

S. 90-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED


மீண்டும்
ஜீவ சக்தி
பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
ஸ்திரீகளின் ருதுக் கோளாறுகளை அறவே ஒழித்து இல்வாழ்க்கையின் இன்பங்களை அநுபவிக்க மீண்டும் ஜீவ சக்தியை அளிப்பது
அருணா
ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
மதராஸ் 17


பேபி கிரைப்
IODISAL
The best
BLOOD PURIFIER
அயோடிசால்
FOR
RING
WORM
SOUTH INDIAN Mfg. Co.
சைபால்
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை




Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

# கல்கி



LKI செப்டம்பர் 14, 1947 **4** அண

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

